நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை
தோற்றம் - 14.09.1901

செந்தமிழ்

பகுதி: 10
தொகுதி: 114
திருவள்ளுவர் ஆண்டு 2051

திங்கள் இதழ்
விலை: ரூ.20
அக்டோபர் - 2020

நான்காம் தமிழ்ச்சங்க வெளியீடு

தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு

முகவை மன்னர் நா.குமரன்சேதுபதி	தலைவர்
மருத்துவர் ந.சேதுராமன்	துணைத் தலைவர்
வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி	செயலாளர்
இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி	உறுப்பினர்
முதுமுனைவர் இரா.இளங்குமரனார்	உறுப்பினர்
பொறிஞர் க.சி.அகமுடைநம்பி	உறுப்பினர்
பேராசிரியர் இரா.சதாசிவம்	உறுப்பினர்
வழக்குரைஞர் கே.ஆர்.என்.கருணாகரன்	உறுப்பினர்
திரு. அழ.சித்தையா	உறுப்பினர்
வழக்குரைஞர் ச.தசரதராமன்	உறுப்பினர்
திரு. துரை கருணாநிதி	உறுப்பினர்
திரு. வி.சத்யநாராயணன்	உறுப்பினர்

செந்தமிழ் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரி கல்லூரிக்குழு உறுப்பினர்கள்

வழக்குரைஞர் ச.தசரதராமன்	தலைவர்
இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி	செயலாளர்
வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி	உறுப்பினர்
பொறிஞர் க.சி.அகமுடைநம்பி	உறுப்பினர்
திரு. அழ.சித்தையா	உறுப்பினர்
திரு. வி.சத்யநாராயணன்	உறுப்பினர்
வழக்குரைஞர் து.மாயராசன்	உறுப்பினர்
வழக்குரைஞர் சு.சிவசாமி	உறுப்பினர்
பொறிஞர் லெ.சிவக்குமார்	உறுப்பினர்
வழக்குரைஞர் ஆர்.பாலாஜி	உறுப்பினர்
திரு. ஜெ.பாலதண்டாயுதம்	உறுப்பினர்
முனைவர். ம.லெல்லிஸ்திவாகர் பல்கலைக்கழக நியமன	உறுப்பினர்
முனைவர். கி.வேணுகா முதல்வர் (பொ)	உறுப்பினர்
முனைவர். கோ.சுப்புலெட்சுமி துணை முதல்வர்	உறுப்பினர்
முனைவர். பா.நேருஜி உதவிப்பேராசிரியர்	உறுப்பினர்

பொருளடக்கம்

1.	**இதழ் மணம்** - பேரா. இரா.சதாசிவனார்	4
2.	**நூல் தகைமை திறனாய்வு** - பேரா. இரா.சதாசிவனார்	7
3.	**சங்கச் சான்றோர்க்குப் பெயர் சூட்டுவிழா** - முதுமுனைவர் இரா.இளங்குமரனார்	11
4.	**முத்தமிழ்க் காப்பியத்தில் நாடகக் கட்டமைப்பு** - ஜெ.அரங்கராஜ், ஆய்வறிஞர்.	13
5.	**இனவரைவியல் நோக்கில் பெரும்பாணாற்றுப்படை** - முனைவர் இரா. பழனிச்சாமி	24
6.	**சங்கச் செய்திகள்**	42

வலைதளம்

www.maduraitamilsangam.com / www.senthamilcollege.com

மின்னஞ்சல்

secretarymaduraifourthtamilsangam@maduraitamilsangam.com
maduraitamilsangam@yahoo.co.in
principalsenthamilcollege@yahoo.co.in

இதழ்க் கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	ரூ.200	ரூ.1,000
ஆயுள் கட்டணம்	ரூ.3,000	ரூ.10,000
புரவலர் கட்டணம்	ரூ.10,000	ரூ.20,000
தனி இதழ்க் கட்டணம்	ரூ.20	

இதழ் மணம்

– பேரா. இரா.சதாசிவனார்

புறநானூற்றுப் புலவன் தொடித்தலை விழுத்தண்டினார் என்னும் சங்கச் சான்றோர் தம்முதுமையில் கையறு நிலையில் தம் ஆற்றாமையை எதிர்கொண்டு தம் இளமைக் காலத்து இன்புற்று வாழ்ந்த பழமை இருந்த நிலையை எண்ணி மனத்தில் அசைபோடும் நிலை முதியவர்களுக்குப் பெருமூச்சும் இளைஞர்களுக்கு முதுமை பற்றிய விழிப்புணர்வையும் கற்பவர் உள்ளத்தில் தோற்றுவித்துக் கற்பனை உலகில் மனம் குவியும்.

நாள் என ஒன்றுபோல் காட்டி முதுமை என்னும் இயக்கம் குன்றிய நிலையில் வாழ்க்கை ஒரு காட்சிப் பிழையாகத் தோன்றும். முதுமையின் பாதுகாப்பு ஒரு ஊன்றுகோல்; இன்னொரு பாதுகாப்பு மனத்தின் இளமை; முதுமையை நோக்கிய பயணம்; அதனை எதிர்கொள்கின்ற எச்சரிக்கை கையில் உள்ள விழுத்தண்டு. ஆலமரத்தின் விழுதுபோல அறிவறிந்த மக்கள், பேரன், பேத்தி என ஊன்றுகோல் மேலோங்க வேண்டும். முதுமையில் உடம்பும் உள்ளமும் உறுதிபெற நாள்தோறும் அதற்குரிய பயிற்சிமேற் கொள்ளல் இன்றியமையாதது. இறுதிநாள்வரைப் போராட்டம் என்பது இயற்கையின் சட்டம்.

தொடித்தலை விழுத்தண்டினார் இளமையில் இயற்கையின் மைந்தன், மருதமரம் அதன்கீழ் ஆழமான நீர்நிலை; மரத்தின் உச்சியிலிருந்து ஆழமான நீருள் மூழ்கி மணலை அள்ளிக் கொண்டு மேலே வந்து காட்டித் தன் இளமையின் ஆற்றலை வெளிப்படுத்தியவர்; இன்று அதன் எதிர்நிலை; கம்பூன்றியநிலை. வாழ்வின் இருபக்கத்தையும் ஒருபாட்டில் கொண்டுவந்து படிப்பவர்களை வாழ்க்கையைச் சிந்திக்கவைக்கிறார்.

செ.அரங்கராசன் (ஜெ.அரங்கராஜ்) ஈழ நாட்டுப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றுகின்றார். இவ்விளைஞர் இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்கு நாள்தோறும் வந்து மதுரை நான்காம் தமிழ்ச்சங்க நூல்நிலையத்தில் உள்ள அனைத்துச் செந்தமிழ் மாத இதழ்களையும் ஆய்வு நூல்களையும் படிப்பார்; தரம் பிரிப்பார்; நகல் எடுப்பார். அப்பொழுது அவருடைய கல்விப்புலமும் உழைப்பும் எனக்கு பெரும் வியப்பளிக்கும்.

செந்தமிழில் "முத்தமிழ்க் காப்பியத்தில் நாடகக் கட்டமைப்பு" என்னும் தலைப்பில் கட்டுரை படைத்துள்ளார். கட்டுரையில் வெற்றுச்சொல் என்பதே இல்லை; அலங்கார அணிநயங்கள் ஏதுமில்லை; கட்டுரை முழுவதும் ஆய்வுப்பார்வை; ஒவ்வொரு தொடரும் பொருள் பொதிந்தவை; சிலப்பதிகாரத்தையும் அதன் உரை ஆசிரியர்களையும் அவர் ஊன்றிப்படித்திருப்பதும் வேற்றுநாட்டு நாடகங்கள் சிலப்பதிகாரத்திற்கு ஈடல்ல என்பதையும் தக்க சான்றுகளுடன் நிறுவியுள்ளார்.

சிலப்பதிகார ஆசிரியர் நாடகத்தினைப் பயன்படுத்தி நாடகப் பாத்திரங்களையும் நாடக ரசிகனையும் ஒன்றிணைத்திருக்கும் சிறப்பு அவருடைய கட்டுரை முழுவதும் வெளிவந்துள்ளது. இப்பேரறிஞர் இக்கட்டுரையை எழுதுவதற்கு எவ்வளவு நுட்பமாகச் சிந்தித்திருக்கிறார் என்பதையும் எவ்வளவு நூல்களைக் கற்று தம் கல்விப்புலத்தை விரிவுபடுத்தியுள்ளார் என்பதும் நினைக்கும் தோறும் வியப்பளிக்கிறது. கட்டுரை தன்னியல்பில் திறனாய்வு நெறிமுறை வழுவாது அமைந்துள்ளதால் கட்டுரைக்குள் நுழைந்து சொல்வதற்கு வேலை இல்லை; படித்துப் பயன்பெறுங்கள்.

இளங்கோவின் நாடகத்தை கட்டுரை ஆசிரியர் திறனாய்வு செய்திருக்கும் நெறியில் நின்றுபடித்து இன்புற நிறையச் செய்திகளை ஆசிரியர் செ.அரங்கராசன் வழங்குகிறார். பேராசிரியருக்கு வாசகர்கள் சார்பில் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இனவரைவியல் நோக்கில் பெரும்பாணாற்றுப்படை என்னும் தலைப்பில் பேராசிரியர் இரா.பழனிச்சாமி கட்டுரை இடம்

மானிடவியலாரின் மக்களுடைய பண்பாடு,
நாகரிகம், உடல்சார்ந்தபணி, உழைப்பு
சிந்தனைக்குரிய மாற்றங்கள் ஆய்வாளர்களின்
விரிந்த ஆய்வுக்குரியவையாகின்றன.
இனக்குழுக்கள் குறித்த பரந்துபட்ட
செய்திகளைத் தொகுத்து
பெரும்பாணாற்றுப்படையின் அமைப்பு முறையை..

பெறுகிறது. உலகம் முழுவதும் உள்ள மக்கள் இனத்தின் தனித்தன்மைகள் வேறுபாடு உடையனவாக அமைந்திருப்பது குறித்த பரவலான ஆய்வு உலகமுழுவதும் நடைபெறுகிறது. மானிடவியலாரின் மக்களுடைய பண்பாடு, நாகரிகம், உடல்சார்ந்தபணி, உழைப்பு சிந்தனைக்குரிய மாற்றங்கள் ஆய்வாளர்களின் விரிந்த ஆய்வுக்குரியவையாகின்றன. இனக்குழுக்கள் குறித்த பரந்துபட்ட செய்திகளைத் தொகுத்து பெரும்பாணாற்றுப்படையின் அமைப்பு முறையைப் பேராசிரியர் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு கட்டுரை அமைத்திருப்பதும் இனவரைவியல் நோக்கில் பாணர்களின் வாழ்க்கையை மையமாக வைத்துச் சிந்தித்திருப்பதும் பாராட்டுக்குரியது.

திருஞானசம்பந்தரின் தேவாரப்பாடல்களுக்குப் பண்இசைத்த யாழ்ப்பாணர் பெரும்யாழ்பாணர் குடியினர், சிதம்பரத்திற்கு அருகில் அண்மைக்காலம் வரை வாழ்ந்து வந்ததாக மகாவித்துவான் ச.தண்டபாணி தேசிகர் ஒருமுறை என்னிடம் சொன்னது நினைவிருக்கிறது. அத்தகைய உயிர்ப்புடைய இசைக்குழுவினர் போற்றுவாரின்றி மறைந்தது பண்பாட்டுச் சிதைவேயாகும்.

****

நூல் தகைமை

திறனாய்வு பேரா. இரா.சதாசிவனார்

"தனிப் பெரும் தாய் நூல் - தொல்காப்பியம்"

இளங்குமரனார் தம்முதுமைக் காலத்தும் தமிழ்மக்கள் தங்கள் வாழ்க்கை நெறியைத் திசை திருப்பிய திருகலாகிய சிந்தனைச் சிதறல்களைச் சுட்டிக்காட்டி, ஆறாம் அறிவாகிய மனம் இருந்தும் அகஉறுப்பாகிய அன்பில்லாதவர்களுக்குப் புறத்துறுப்புப் பயன்படாதது போலும் "நெஞ்சில் வஞ்சம் இருந்தால் ஆறாம் அறிவு பயன்மிகு கேடாம்" என அறிவுறுத்துகின்றார்.

தொல்காப்பியம் தமிழ்மரபு பேணும் ஒருதொகைநூல். ஆசிரியர் தொல்காப்பியனார் தமக்குமுன் தோன்றிய முந்நூற்றுக்கு மேற்பட்ட இடங்களில் என்ப, என்மனார் எனக் குறிப்பிடுவது தமிழ்மொழி வழக்கும் செய்யுளும் பழைய மரபு வழியாகத் தமிழ் மொழியில் வாழையடி வாழையாக வந்த மரபு என்பதனை வலியுறுத்தும். அம்மரபு உணராதவர் எத்தனையும் பொருட்கிசையாக் கற்பனை வழி அறிவியல் பார்வை இன்றி மொழியியல் தடம்புரண்டு அகத்தியன் என்னும் தனிஒருவன் கூற்று என மொழிவது ஐந்திரம் மூலம் என்பதும் அறியாமையின் மொத்த வடிவம் என்பதாகும். உலகம் முழுவதும் மொழிநூல் வல்லுநர்கள் தொல்காப்பிய

நூற்பாக்களில் அமைந்துள்ள அறிவியல் பார்வையைக் கற்கும் தோறும் வியப்புறுகின்றனர். நுட்ப அறிவற்ற கற்றறி மூடங்கள் இடைக்காலத்தில் தமிழ் இலக்கணத்தைப் பிறழ உணர்ந்து அளித்த விளக்கம் அவர்களுடைய அறியாமையின் வெளிப்பாடு. நெஞ்சில் வஞ்சனை இருந்தால் கல்வி பயன்படாது என்பதை "வஞ்சனையார் யார் மாட்டும் சாராத மைந்தன்" என இறைவனைப் போற்றுவது தமிழ் மரபு.

வைதிக வேதியர் பிறமொழியில் கோயில்களில் வழிபாடு செய்வது மக்களுக்கும் அரசுக்கும் தீங்கு விளைவிக்கும் என திருமூலநாயனார் கூறிய கூற்றை மேற்கோள் காட்டியிருப்பது கற்றுணரத்தக்கது. தொல்காப்பிய வழிநின்று சங்க இலக்கியம், திருக்குறள் போன்ற நூல்கள் மரபுகாத்து அறிவியல், இலக்கியப் பார்வையுடன் நூல் செய்திருக்கும் மாண்பை ஆசிரியர் எடுத்துரைக்கும் திறம் செவ்விதின் உணரத்தக்கது.

திருக்குறள், சங்க இலக்கியம் ஆகிய பண்டைநூல்கள் ஊழ்குறித்த விளக்கம் பிற்காலத்தில் ஊழ்வினை என மாற்றம் பெற்று அதன் விளைவாக சமயம் சார்ந்த சடங்கு, நம்பிக்கைகள் அதன்வழியாக அரசர்கள், வேதியர்களுக்குத் தானம் என்ற பெயரில் நிலங்களை தானம், உத்தமதானம், வேததானம் எனப்பல வகைகளிலும் வைதிக நெறிவளர்ந்து நீதிவழுவி நால்வர்ணக் கோட்பாடு தலைதூக்கி மக்களிடையே ஏற்றத்தாழ்வு பெருகி ஆண்டான் அடிமை என்னும் வழக்கம் ஏற்பட்டு மனிதனை மனிதன் சமமாக நடத்தும் நடைமுறை ஒழுக்கம் சிதைந்தது. அதனை ஆசிரியர் சுட்டிக்காட்டும் செய்தி அரசியல் நாற்காலிக்காக சுயமரியாதை விலைபேசப்படுவது பொறுப்புணர்ச்சியற்ற ஒரு சமுதாயத்தின் வீழ்ச்சியே. அதனைப் பயன்படுத்தி சிலர் பலரை அடிமையாக்கும் முயற்சி மக்களாட்சி என ஆசிரியர் மனம் நொந்து எழுதுவது காண்க.

ஊழ்குறித்து ஆசிரியர் விளக்கம் அரியகுறிப்புடையது. பேரா இயற்கையே ஊழ் என்பதும் அது இயற்கையின் ஒழுங்கியல் என்பதையும் ஆசிரியர் வலியுறுத்துவது உலகத்து அறிஞர்கள் ஏற்றுக்கொள்ளும் மெய்ப்பொருட்செய்தி.

ஆசிரியர் ஒருசிறிய நூலுள் செவ்விலக்கியப்பரப்பு முழுவதையும் எடுத்தியம்புவது மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் நூலைப்படித்துப் பயன்பெறவேண்டிய இன்றியமையாத செய்தியாகும்.

மக்கள் நேயச் சுயமரியாதை – பேராசிரியர் பொற்போ (சென்னைப் பலக்கலைக்கழகத்தில் ஆற்றிய உரை)

(நூலாய்வு பேரா.இரா.சதாசிவனார், இதழாசிரியர்)

உலகம் முழுவதையும் தன்னிலிருந்து வேறாகப் பார்க்காமல் தானாகப் பார்த்தல் என்பது உலகம் தழுவியது; உலகம் தழுவியது ஒட்பம் என்பது திருக்குறள். ஆனால் உலகத்து இயற்கை இருவேறுபட்டது; ஒன்று திட்டமிட்ட அதிகாரம் அதன்வழி குவிதல் பொருளாதாரம். மற்றொன்று அறிவு சார்ந்த நடைமுறையைப் பரவலாக்கி உலகம் இன்புறுதல்.

உலகவரலாற்றில் இவ்விருவகை வாழ்க்கை முறைக்கும் இடையே போர் நிகழ்ந்தவண்ணம் உள்ளது. இதனைப் பேராசிரியர் பொற்கோ "சுயமரியாதை உணர்ச்சி என்பது சுயநல உணர்ச்சியல், மக்கள் இனத்தின் மதிப்பைப் பாதுகாக்கிற உணர்ச்சி, மக்கள் நேயத்தை வளர்க்கிற உணர்ச்சி" எனக் குறிப்பிடுவது இன்றைய மனித நாகரிகத்தின் கட்டாயம்.

உலகவரலாற்றில் சமயம் எனும் தோற்றம் புரோகிதர் கூட்டத்தையும் கோயில் நடைமுறைகளையும் உருவாக்கி நம்பிக்கைகள் அவைசார்ந்த சடங்குகள் புனிதமானவை என்றும் அவை கேள்விக்கு அப்பாற்பட்டவை என்ற வழக்காறு உருவாகி கோயிலும் திருவிழாக்களும் வாணிக மையமாக மாற்றம்பெற்றது.

> சமய நிறுவனங்கள் வேறு; அன்பை மூலமாகக் கொண்ட அருள் சார்ந்த நடைமுறை வாழ்க்கை வேறு. இவை இரண்டையும் ஒன்று போலக் காட்டி, ஒரு மாயத் தோற்றத்தை உருவாக்கி...

இதனை சதுமறை ஆகம சாத்திரம் எல்லாம் சந்தைப்படிப்பு என அருளாளர்கள் எடுத்துரைத்தனர். சமயநிறுவனங்கள் பொருள் குவிப்பு வணிகமையங்களாக மாற்றம் பெற்றுவிட்டன. நாளொன்று ஒரு கோடிக்கு மேல் வருவாய் ஈட்டுகின்ற கோயில் நடைமுறைகள் பெருகின. அங்கே அருளை மையமாகக் கொண்ட சமயநெறி முறைகள் காண்பதற்கில்லை. கோயில் நம்பிக்கைகளுக்கு உரமிட்டு வளர்த்து தங்கள் பொருளாதாரத்தை மேம்படுத்திக்கொள்கின்ற நிலை உருவாகிவிட்டது. இதிலிருந்து மக்களை விடுவிக்க வேண்டிய தேவை இன்று அதிகமாக உள்ளது. சமய நிறுவனங்கள் வேறு; அன்பை மூலமாகக் கொண்ட அருள் சார்ந்த நடைமுறை வாழ்க்கை வேறு. இவை இரண்டையும் ஒன்று போலக் காட்டி ஒரு மாயத் தோற்றத்தை உருவாக்கி மக்களுடைய பொருளாதார அரசியல் சிந்தனையை திசை திருப்பிவிட்டனர். அதன்விளைவாக அறியாமை, வறுமை, நோய்; உடல்நலிவு, சிந்தனைச் சிதறல் என மக்கள் மீளாத்துயரில் தவிக்கின்றனர்.

ஐந்து வயதுக்குக்கீழே உள்ள இந்தியக் குழந்தைகளில் 38.4 விழுக்காடு உடல் வளர்ச்சியற்றவர்கள். பள்ளிக்குச் செல்லாத குழந்தைகள் இருபது விழுக்காடு, இருபத்தோரு விழுக்காடு குழந்தைகள் ஊட்டச்சத்து இன்மையால் எலும்பும் தோலுமாக இருக்கும் அவலம்.

இதுதான் குழந்தையும் தெய்வமும் ஒன்று என்று பேசும் கோயில் நாகரிகம். இதுதான் இந்திய அரசியல் சமூகப் பொருளாதார நிலை இவற்றை எல்லாம் எதிர்த்து ஆளும் வர்க்கத்தை சார்ந்து நில்லாமல் எதிர்த்து நின்று காலம் காலமாகப் போராடிவருகின்ற பெரியாரின் சிந்தனை குறித்த அரியபடைப்பு பேராசிரியர் பொற்கோவின் **"மக்கள் நேயச் சுயமரியாதை".** சிந்திக்கிறவர்கள் படிப்பதற்குரிய நூல். பழம்பெருமையும் பாரம்பரியமும் பேசி காலத்தை வீணாக்காமல், உலகம் தழுவிய மக்கள் நலத்தின் அறிவார்ந்த பார்வை குறித்த கவலையுடையவர்கள் படிக்கலாம். மாவும் மாக்களும் ஐயறிவு உடையன மக்கள் தாமே மனநலத்தால் பகுத்தறிவு பெறுகிறவர்கள்.

****

சங்கச் சான்றோர்க்குப் பெயர் சூட்டுவிழா

முதுமுனைவர் இரா.இளங்குமரனார்

17. தொடித்தலை விழுத்தண்டினார்

தொடியாவது வளைவு; தலை உச்சி; விழுத்தண்டு; சிறந்த கம்பு முதியோர் கால் தளர்ந்த போது, ஒரு துணைக்கால் கொண்டு நடத்தற்குப் பிடிக்கும் கோல். கையால் பிடிக்க வாய்ப்பாக அமைந்தது உச்சியில் வளைவு. விழாமல் காக்க உதவும் தண்டு ஆதலால், விழுத்தண்டு ஆயது. இதனைப் பாடியவர் முதியவரா இளையவரா? முதியவரும் ஆகலாம் முதுமை ஆகாதவரும் ஆகலாம். வேந்தன் பாணாற்றுப்படை பாடினால், பாணன் ஆகி விடுவானா? பாடுபொருளுக்குத் தகக் கூடு விட்டுக் கூடு பாய்வதே புலமையர் கதையர் நடிப்பர் நிலை என்பது பொதுக்குறிப்பு. ஆனால், இப்பாட்டனார், மெய்யான பாட்டனாரின் மேல்வந்த பாட்டனாராகப் பாடுகிறார். இது, முதுமை, முதுமைக்கு உணர்த்தி, இளமையை நினைவு கூர்ந்து அவ் வளமை போயிற்றே! மீளவருமா? என இரங்கியதா? பாடலைப் பார்க்கலாம்!

இனிநினைந்து இரக்கம் ஆகின்று, திணிமணல்
செய்வுறு பாவைக்குக் கொய்பூத் தைஇத்
தண்கயம் ஆடும் மகளிரொடு கைபிணைந்து
தழுவுவழித் தழீஇத் தூங்குவழித் தூங்கி
மறைஎனல் அறியா மாயமில் ஆயமொடு
உயர்சினை மருதத் துறையுறத் தாழ்ந்து
நீர்நணிப் படிகோடு ஏறிச் சீர்மிகக்
கரையவர் மருளத் திரையகம் பிதிர

நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து
குளித்து மணற் கொண்ட கல்லா இளமை
அளிதோ தானே! யாண்டுண்டு கொல்லோ?
தொடித்தலை விழுத்தண்டூன்றி நடுக்குற்று
இருமிடை மிடைந்த சிலசொல்
பெருமூ தாளரேம் ஆகிய எமக்கே" (புறம். 243)

திணை: பொதுவியல். **துறை:** கையறு நிலை.

"இப்பொழுது நினைத்தால் வருந்தத்தக்கதாக உள்ளது. மணலைத் திரட்டிச் செய்யப்பட்ட பாவை வடிவுக்குப் பறித்த பூவைச் சூட்டியதும், குளிர்ந்த பொய்கையில் விளையாடும் பெண்களோடு கை கோத்து, தழுவும் போது தழுவியும், அசைந்தாடும் போது அசைந்தாடியும் ஒளிவு மறைவு என்பவை அறியாத கரவில்லாத கூட்டத்தோடு விளையாடியதும், உயர்ந்த கிளைகளையுடைய மருத மரத்தின் உயரம் தாழ்ந்து நீரொடு படிந்த கிளையைப் பற்றி ஏறிச் சிறப்புமிகக் கரையில் நிற்பவர் வியப்பவும், அலைத்துளி மேலே எழும்பவும் ஆழமிக்க நீண்ட அந்த நீர்நிலையில் 'துடும்' என்று ஒலி உண்டாகக் குதித்து மூழ்கி, அடிமணலை அள்ளிக் காட்டியதும் ஆகிய அந்தக் களங்கமில்லாத இளமை, வருந்தச் செய்கிறது. இனி, அது எப்பொழுது வாய்க்கும் பூண் பிடித்த வளைந்த உச்சியை உடைய பெரிய கம்பினை ஊன்றித் தளர்ந்து இருமல் இடை இடையே வந்த சில சொற்களையுடைய பெரிய முதியவராகிய எமக்கு.

அரும்பொருள்: பாவை-பாவை வடிவில் செய்யப்பட்ட மணற்குவியல் தூங்குவழி- அசையும்போது: மறை-களங்கம் ஆயம் - கூட்டம்; சினை-கிளை; குளித்து-மூழ்கி; கல்லா இளமை-வஞ்சத்தை அறியாத இளமை, குட்டம்-ஆழமான நீர்நிலை; தொடர-வளைவு; இரும்-இருமல்.

தம்முதுமை நிலைக்குத் தாமே இரங்கிக் கூறியமையால் இது 'கையறுநிலை' ஆயிற்று! கையறுதல் - செயலற்றநிலை.

****

முத்தமிழ்க் காப்பியத்தில் நாடகக் கட்டமைப்பு

- ஜெ.அரங்கராஜ், ஆய்வறிஞர்,
ஆகோள் ஆய்வு மையம், யாழ்ப்பாணம்

தொன்றுதொட்டே அறிந்த கதைப்பொருளையுடைய கூத்துக்களை மீண்டும் மீண்டும் கண்டுகளித்தல் என்பது ஆசிய இனங்களிடையே மரபுடையனவாகக் காணப்படுகின்றது. கதைதெரியாமல் யாரும் நாடகத்தினைக் காண்பதில்லை. எனில் இங்கு கதை மாந்தரோடு இணைந்தே பார்வையாளனும் தன்னை நாடகப்பாத்திரமாகவே உணருகின்றான். பலமுறை அறிந்த கதையை எந்தக்கலைஞர் சிறப்பாகச் செய்கிறார் என்பதே இங்கு போற்றுதலுக்குரியதாக அமைகின்றது. இவ்வாறான கலைஞர்களுடன் பார்வையாளனும் தன்னை இணைத்துக்கொள்கின்றான். இவ்வகையிலேயே சிலப்பதிகாரத்து கதையமைதியைக் கொண்ட கோவலன் கூத்தும், காத்தவராயன் கூத்து முதலியனவும் நிகழ்வுறுகின்றன.

வடமொழியில் நாடகத்திற்கென்றே எழுதப்பட்ட பல நூல்கள் உள்ளன. இதற்கான காரணம் யாதென எண்ணும் போது கிரேக்க ஆட்சி 2000 ஆண்டுகளுக்கு முன் வடஇந்தியாவில் ஏற்பட்டதன் விளைவுகளில் ஒன்றாகவே இதனைக் கருதவேண்டியுள்ளது. மகாஅலெக்சாண்டரின் படையெழுச்சியின் விளைவால் வடஇந்தியாவின் பல பகுதிகள் கிரேக்க ஆட்சியாளர்களின் கட்டுப்பாட்டில் வந்தன. கிரேக்க ஆட்சியாளர்கள் தாங்கள் நாடகங்களைக் காண விரும்பிய போது கிரேக்கக் கலைஞர்களைக் கொண்டே அந்த நாடகங்களை நிகழ்த்தினர். கிரேக்கத்தில் ஏற்பட்ட நாடக எழுச்சியின் போக்குகளை வடமொழி நாடகங்களில்

இந்திரகாளியமும், அறிவனார் செய்த
பஞ்சமரபும், ஆதிவாயிலார் செய்தபரத
சேனாபதீயமும், கடைச்சங்கமரீஇய
பாண்டியருட் கவியரங்கேறிய
பாண்டியன் மதிவாணனார் செய்த...

பெரிதும் காணலாம். கிரேக்கர்கள் உலகியலை நாடகப்பொருளாகக் கொண்டனர். அதே அமைவு வடமொழி நாடகங்களில் உண்டு. வடமொழியின் நாடகத்தில் வரும் விதுடன், சாகரன், விடன் போன்ற துணைக்கதைமாந்தர் அமைப்பும் கிரேக்க நாடகங்களோடு பெரிதும் ஒப்புமையுடையனவாகின்றன. யவணிகை எனும் நாடகத்திரைச்சீலை கிரேக்கரிடமிருந்து வடஇந்தியாவிற்கு வந்ததாகக் கருதப்படுகின்றது. காளிதாசனின் நாடக வர்ணனைகள் பழந்தமிழ் இலக்கியங்களோடு பெரிதும் ஒத்துச் செல்லுதலினை பேரா.பா.மருதநாயகம் முதலானோர் குறிப்பிட்டுக்காட்டுவர். பெரும்பாலான வடமொழி நாடகங்கள் குறிப்பிட்ட காலப்பகுதியில் மட்டும் நிகழ்த்தப்பட்டு பின்பு வழக்கொழிந்தன. சிலப்பதிகாரம் இவ்வாறான தன்மையில் இருந்து மாறுபட்டு முழுவதும் தமிழ் மரபு சார்ந்த தன்மையினை உடையனவாக அமைகின்றதெனலாம்.

காப்பியங்களில் நிகழக்கூடிய நிகழ்வுகள் யாவும் பதிகத்தில் கூறப்படுவதில்லை. ஆனால், சிலப்பதிகாரத்தில் காப்பியத்தின் முப்பது காதைகளின் கதைப் பொருள்களும் இக்காப்பியம் செய்யப்படுவதன் காரணமும் கூறப்பட்டுள்ள அமைப்பு ஒரு நாடகத்தில் கட்டியக்காரன் கட்டியம் கூறுகின்ற தன்மையினைப் பெற்றுள்ளமையினைக் காணலாம். சிலப்பதிகாரம் தமிழ் நாடக மரபையும் உள்ளடக்கிய முத்தமிழ்காப்பியம் என்பதினை பல்வேறு சான்றுகளின் வழி அறியலாம். “இஃது அவ்வாறன்றி யோனியென்னும் நாடகவுறுப்பும் நாடகமுந்தழுவி உள்ளோன் தலைவனாக உள்ளதொரு பொருண்மேற் சித்திரிக்கப்படாது பட்டாங்கு கிளந்து பலவினப்பாட்டான் வருதலின், ஈது அன்னதன்றென்பார்க்குக் காப்பியமென்றலுமாம்” (சிலம்பு -

உரைப்பாயிரம்) என்ற அடியார்க்கு நல்லார் கூற்றும் இதனை வலியுறுத்தும். அத்துடன் "சாரகுமாரனென அப்பெயர் பெற்ற குமாரன் இசையறிதற்குச் செய்த இசைநுணுக்கமும் பாரசவமுனிவரில் யாமளேந்திரர் செய்த இந்திரகாளியமும், அறிவனார் செய்த பஞ்சமரபும், ஆதிவாயிலார் செய்தபரத சேனாபதீயமும், கடைச்சங்கமரீஇய பாண்டியருட் கவியரங்கேறிய பாண்டியன் மதிவாணனார் செய்த முதனூல்களிலுள்ள வசைக்கூத்திற்கு மறுதலையாகிய புகழ்க்கூத்தியன்ற மதிவாணர் நாடகத்தமிழ் நூலுமென இவ்வைந்தும் இந்நாடகக் காப்பியக் கருத்தறிந்த நூல்களன்றேனும் ஒருபுடையொப்புமை கொண்டு முடித்தலைக்கருத்திற்று இவ்வுரையெனக் கொள்க" என்ற அடி யார்க்கு நல்லாரின் உரைப்பாயிரக் கூற்றும் "பொப்பண்ண காங்கெயர் கோனளித்த சோற்றுச் செருக்கல்லவோதமிழ் மூன்றுரை செய்வித்ததே" என்ற சிறப்புப்பாயிர அடிகளும் சிலப்பதிகாரம் ஒரு நாடகக் காப்பியகமுமாம் என்பதை வலியுறுத்துவனவாக அமைகின்றன.

புகார்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் எனும் மூன்று பெரும் பிரிவுகளையும் முப்பது உட்பிரிவுகளையும் உடைய சிலப்பதிகாரத்தில் இருபத்திரண்டு உட்பிரிவுகள் காதை எனும் வழக்கினையுடையது. கதையையுடையது காதை எனும் உரையாசிரியர்களின் கூற்றுகளின் வழி கதையை விளக்குவது காதையாயிற்றெனலாம். கதையெனும் சொல் ஈழத்து வழக்கில் பேச்சு எனும் பொருளில் வழங்குகின்றது. அதனைப் போலவே பழமை எனும் சொல் கொங்கு வழக்கில் நீண்ட பேச்சினை (உரையாடலைக்) குறிப்பதாக வழங்குகின்றது. இதன்வழிப் பேச்சுவழக்கில் உள்ள பழமையான தொன்மை நிகழ்வைக் குறிக்கக் கூடியது. கதை காதை என்பதாகக் கொள்ளலாம். காதை நாடகத்தின் கருவாக அமைவதாகும்.

நாடகத்தின் கட்டியப்பகுதிபோல் பதிகம் அமைய, முதல்காட்சி போல் அமையும் மங்கல வாழ்த்தில் பெருமிதமும் மிடுக்கும் எழுச்சியுமாக நாடகம் தொடங்குதலினைக் காணலாம். இயற்கையின் பெருநிகழ்வுகளை வாழ்த்துதல் சோழர்க் குடியின் சிறப்புகளோடு அமைவதாகின்றது. இவ்வெழுச்சியான பாடல்கள்

பார்வையாளர்களின் முழுக் கவனத்தினையும் ஈர்க்கக் கூடியனவாம். மங்கலவாழ்த்து என்பதற்கு "கல்லியாணப்பாட்டு" என அரும்பத உரையாசிரியரும், 'திருமணப்பாட்டு' என அடியார்க்கு நல்லாரும் விளங்கங்கூறுவர். இன்றும், கொங்குநாட்டுத் திருமணப்பாடல், கம்பர்வாழ்த்து, மங்கல வாழ்த்து என வழங்குதலைக் காணலாம். ஒரு திருமண வாழ்த்தில் எழுச்சியுறு பாடல்களை அமைத்தல் என்பது நாடக உத்தியேயாகும். எழுச்சிமிகு பாடலுக்குப்பிறகு கதையின் தலைவனும் தலைவியும் அறிமுகம் செய்யப்படுகின்றனர். இவ்வறிமுகத்தில் நாடகத்தன்மையின் போக்கினையே காணவியலும். கதைமாந்தரில் முதன்முதலில் கண்ணகியே அறிமுகப்படுத்தப்படுகிறாள்.

நாகநீ ணகரொடு நாகநா டதனொடு

போகநீள் புகழ்மன்னும் புகார்நக ரதுதன்னில்

மாக வானிகர் வண்கை மாநாய்கன் குலக்கொம்ப

ரீகைவான் கொடியன்னா ளீராறாண் டகவையாள்

அவளுந்தான்,

போதிலார் திருவினாள் புகழுடை வடிவென்றுந்

தீதிலா வடமீனின் றிறமிவ டிறமென்று

மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக்

காதலாள் பெயர்மன்னுங் கண்ணகியென் பாள்மன்னோ (சிலம்பு: 23 –30)

என்னும் அடிகளால் கண்ணகியின் குடியும் குணமும் வடிவுமாகப் பெண்களின் பெருந்திறத்திற்குரியவளாக அறிமுகம் செய்யப்படுகிறாள். கோவலன் முதலில் அறிமுகம் செய்யப்படாமல் கண்ணகி அறிமுகம் செய்யப்பட்டமை குறித்து "இவளை முன்

கூறிற்று கதைக்குநாயகியாதலின்" என அரும்பத உரையாசிரியர் குறப்பிடுவார். அத்துடன் சிலப்பதிகாரத்தில் பல இடங்களில் கதையின் படிநிலைக் கட்டத்தினை விளக்கும் முகமாக கண்ணகியின் அறிமுகம் தொடர்போக்காக அமைவதினைக் காணலாம். மங்கல வாழ்த்திற்குப்பிறகு மனையறம்படுத்த காதையில் கோவலனால் நல்மனைவியாக "மாசறுபொண்ணே வலம்புரிமுத்தே" என கண்ணகி அறிமுகம் செய்யப்படுகின்றாள். வேட்டுவவரியில்

இவளோ, கொங்கச் செல்வி குடமலை யாட்டி

தென்றமிழ்ப்பாவை செய்தவக்கொழுந்

தொருமா மணியா யுலகிற் கோங்கிய

திருமா மணியெனத் தெய்வமுற் றுரைப்பப் (சிலம்பு: 12:50–53)

என தமிழகம் முழுவதற்குமான தெய்வமாக பின்நடப்பவற்றை முன் விளக்கும் முறையில் அறிமுகம் செய்யப்படுகின்றாள். இதில் கொங்கச் செல்வி என்பது சேரர்க்கு மகளாகவும், குடமலையாட்டி சோழருக்கு மகளாகவும், தென்தமிழ்ப்பாவை, பாண்டியர்க்கு மகளாகவும் பொருள்படும்படி அறிமுகம் செய்யப்படுவதாக இவ்வடிகள் அமைவதோடு மேலும் பல பெருமைகளை கொண்டதாக இவ்வடிகள் அமைவதனைக் காணலாம்.

வழக்குரைக் கதையில் இரண்டு இடங்களில் கண்ணகி குறித்த அறிமுகம் இடம் பெறுகின்றது. முதலாவதாக பாண்டிய மன்னனின் வாயில் காப்பாளன், பாண்டியனிடம் கண்ணகியின் தோற்றமும் வருகையும் குறித்து அறிவிப்பதாக இடம்பெறுவதாகும். இவ்வடிகளில் தமிழர்களின் மரபு வழிபட்ட தாய்த்தெய்வங்களோ டெல்லாம் கண்ணகி குறிப்பிடப்படுதல் முழுவதும் நாடகத்தன்மையு டையதாகும்.

அடர்த்தெழு குருதி யடங்காப் பசுந்துணிப்

பிடர்த்தலைப் பீட மேறிய மடக்கொடி

வெற்வேற் றடக்கைக் கொற்றவை யல்ல

ஏறுவர்க் கிளைய நங்கை யிறைவனை

யாடல்கண் டருளிய வணங்கு சூருடைக்

கானக முகந்த காளி தாருகன்

பேருரங் கிழித்த பெண்ணு மல்லள்

செற்றனள் போலுஞ் செயிர்த்தனள் போலும்

பொற்றொழிற் சிலம்பொன் றேந்திய கையள்

கணவனை யிழந்தாள் கடையகத்தாளே

கணவனை யிழந்தாள் கடையகத்தாளே, யென (சிலம்பு: 20.34 - 44)

நாடகக் காட்சியமைவில் பார்வையாளர்களின் கண்முன் மேற்கண்ட அடிகளில் வரும் தெய்வங்கள் யாவும் காட்சிப் படுத்தப்படுகின்றமை எண்ணத்தகும். அதே வழக்குரைக்காதையில் அடுத்த நிகழ்வாக கண்ணகி பாண்டிய மன்னன் தன்னை யார் என வினவ அதற்கு விடையாகத் தன்னை தானே அறிமுகம் செய்யும் நிகழ்வு இடம் பெறுகின்றது. அவ்வறிமுகத்தில் தனது சோழ மன்னர்களான சிபிமன்னனின் அறமும், மனுநீதிச்சோழனின் நடுவு நிலையும் விளக்கப்படுவது முழுமையும் நாடகக்கட்டமை வாகவே காட்சிப்படுத்தப்பட்டுள்ளதெனலாம். வஞ்சிக்காண்டத்தில் தெய்வநிலையில் கண்ணகி தன்னை அறிமுகம் செய்து கொள்ளுதலும் நாடகக்கட்டமைப்பே.

பொதுவாக இயற்றமிழ் நூல்களில் தொடர் அறிமுகங்கள் குறை வாகவே அமையும். நாடகக் காப்பியங்களிலேயே அறிமுகக்காட்சிகள் மிகும். ஏனெனில் அறிமுகங்கள் மக்களின் கவனத்தை ஈர்த்து அக்கதை மாந்தரின்மேல் மிகுந்த ஈடுபாட்டை ஏற்படுத்தக் கூடியவை அதனடிப்படையில் கண்ணகியின் ஒவ்வொரு படிநிலையும் அறிமுகம் செய்யப்பட்டது ஒரு நாடகத்திற்குத் தேவையான குறியீடாகவே அமைவதெனலாம்.

கண்ணகி பேசக்கூடிய இடங்கள் மிகக்குறைவு அவற்றை ஈடுசெய்வதாக இவ்வறிமுகங்களும் நாடகப்போக்கிலேயே அமைந்துள்ளமை யையும் காணலாம்.

வடமொழியில் பிரகரணம் எனும் நாடகவகைமை உண்டு. இதன் அமைதி எல்லாவற்றையும் இழந்த தலைவன் அவற்றைத் தன்முயற்சியால் மீட்டுப்பெறுதல் என்பதாகின்றது. இதனோடு சிலப்பதிகாரம் ஒருபுடை ஒப்புமை உடையதாகின்றது. சிலப்பதிகார நாடக அமைவியலில் அதன் அகப்பகுதி துன்பம் இழையோடு வதாகவே அமைந்திருக்க அதன் புறப்பகுதி இன்பம் நிறைந்த பாங்கில் அமைந்திருத்தல் சிறப்பு. சான்றாக கானலவரி, ஆய்ச்சியர் குரவை, வேட்டுவவரி முதலானவற்றினைக் குறிப்பிடலாம்.

நாடகத்தின் எதிர்வரும் நிகழ்வுகளை சில உத்திகளின் வழி முன்பே உணர்த்திவிடுதல் என்ற தன்மையினை சிலப்பதிகாரத்தில் பல இடங்களில் காணலாம். முன்பே அறிதலின் வழி மக்கள் நாடகத்தின் அடுத்தகட்டத்தினை சுவைத்தலுக்கு ஆயத்தப்ப டுத்தப்பட்டு விடுகின்றனர் எனலாம். முன்பே குறிப்புணர்த்துதல் என்ற உத்திக்கும் பெரிதும் துணைபுரிவது கனவாகும். கனவின் வழியாக நாடகத்தினை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச்செல்லுதல் எனும் உத்தி சிலப்பதிகாரத்தில் நன்கு பயன்படுத்தப்பட்டுள்ளமைக்கு கண்ணகி கண்ட கனவு, கோவலன் கண்ட கனவு, கோப்பெருந்தேவி கண்ட கனவு எனும் காட்சிகளால் பலன்சொல்லும் வகையில் அமைந்தவை. கனாத்திறம் உரைத்த காதைக்கு உரை செய்த அடியார்க்கு நல்லார் பொன்னவன் கனாநூல் என்ற பத்தாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டு இன்று கிடைப்பனவான கனவு

கண்ணகியை தெய்வத்தன்மை
நோக்கிக் கொண்டு செல்கின்ற
போக்கில் அவளது இயல்பாக அதிகம்
பேசாத பண்பும் வினாவிற்கு
மாத்திரமே விடை பகரும்...

நூற்களில் மிகவும் பழமையானதுமான நூலில் இருந்து பாடல்களை மேற்கோள்காட்டி விளக்குவர். ஐரோப்பியர் "சிக்மண்ட் பிராய்டு" அவர்களின் கனவு குறித்த ஆய்வுகளையே சிறந்ததெனக் கருத தமிழர்கள் அதற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கனாநூல் கண்டு விட்டனர் என்பது எண்ணத்தகும்.

மேடையில் காட்சிப்படுத்த இயலாதவற்றையும் கனவின்வழி வசனத்தில் சொல்லுதல் நாடகவழமையாம். நாடகத்தில் பின் நிகழவுள்ள காட்சிகளை குறிப்பால் முன்பே உணர்த்துதல் என்ற உத்தியில் இசையும் சிறப்பானதொரிடத்தையும் பெறுவதாகின்றது. இதனை, வேனிற்காதையால் அறியலாம். கோவலனைப்பிரிந்த மாதவி மாலையில் நிலாமுற்றத்தில் இருந்து மிடற்றலும் யாழிலும் இசைக்கின்றாள். மேற்செம்பாலை (கல்யாணி இராகம்) பண்ணினை முதலில் மிடற்றால்பாடி பின்னர் சகோடயாழினால் இசைக்கின்றாள். பதினாட்கோவையாகிய சகோடயாழை உழைகுரலாக கைக்கிளைத் தரமாகக் கட்டி இசைபொருத்து அகநிலை மருதம், புறநிலை மருதம், அருகியல் மருதம், பெருகியல் மருதம் என்னும் சாதிப்பெரும் பண்களை நலம் பெற நோக்கிப் பாடுமிடத்துப் புறமாகியதோர் பண்ணிலே மயங்கினாள் என்பதான நிலையில் இவ்வமைப்பினைப் பண்ணுப் பெயர்த்தல் எனத் தமிழிசையில் வழங்குவர். இசையை ஒரு ஒருதாய்ப்பண்ணிலிருந்து பிறிதொரு தாய் பண்ணிற்குக் கொண்டு செல்லுதலே பண்ணுப்பெயர்தல் எனப்பெயர் பெறும். இதனை, இன்றைய கர்நாடக இசையில் கிரகபேதம் என அழைப்பர். மத்திமத்திலிருந்து காந்தாரத்தை நோக்கிச் செல்லும் இவ்விசையமைப்பு இவ்வகைத்தே எனலாம். இதன்வழி கோவலன் மாதவியிடம் இருந்து கண்ணகியிடம் சென்று விட்டான் என்ற செய்தி பார்வையாளர்களுக்கு உணர்த்தப்படு வதாகின்றது. இதன் பிறகு மாதவி கோவலனைக் காண்பதேயில்லை. நாடகப்போக்கின் மாறுதலை முன்பே உணர்த்தக் கூடியதாக இவ்விசைக்குறிப்பு அமைகின்றது.

நாடுகாண் காதையிலே தீமொழி கூறிய வம்பப்பரத்தையை கவுந்தி சபித்தமையும் அவர்களுக்கு சாபத்திலிருந்து விலக்க ளித்தமையும் முழுமையான நாடகப் போக்காகவே அமைகின்றன.

நாடகக்கதை நகர்விற்கு பின்னின்று ஒலிக்கும் குறள் இன்றியமையாததாக அமைகின்றது. இப்பின்ஓசையை அசரீரி என வழங்குவர். துன்பமாலையில் தன் கணவன் குற்றமற்றவனே என்பதனை அறிய கதிரவனை நோக்கிக் கண்ணகி கேட்கின்றாள். அப்பொழுது பின்னணி ஒலியில் உன் கணவன் குற்றமற்றவனே என விடை வருகின்றது. இதனை,

காய் கதிர்ச்செல்வனே கள்வனோ என்கணவன்

கள்வனோ அல்லன் கருங்கயற்கண் மாதராய்

ஒள்ளெரி யுண்ணுமிவ் வூரென்ற தொருகுரல்

என்னும் அடிகளின் வழி அறியலாம். அது போலவே வரந்தரு காதையிலும் கண்ணகியின் குரலாக அசரீரி ஒலித்தலைக் காணலாம். ஒரு நாடகப் போக்கிலே சலிப்பில்லாமல் பார்வையாளனை இருத்தவும் கதையின் மீது ஆர்வத்தைச் செலுத்தச் செய்யவும் நாடகத்தின் நிகழ்ச்சிப் படிநிலைகள் வகை செய்வதாக அமைய வேண்டும். அவையாவும் சிலப்பதிகாரத்தில் பொருத்தமாக அமைந்துள்ளன என்பதற்குச் சான்றாக அதன் காதை வைப்பு முறையினையே குறிப்பிடலாம். கொலைக்களக்காதையிலே கதையின் தலைவனான கோவலன் கொல்லப்பட்டுவிட்டான் கிட்டத்தட்ட கதை முடிந்துவிட்டது. கோவலன் கொலையுண்டு கிடக்கின்றான். மிகப்பெரிய துன்பம பார்வையாளர்களையும் பற்றிவிட்டது. கதை அடுத்த கட்டத்திற்கு நகர வேண்டும். நகரும் போது கண்ணகிபடும் துன்பநிலையை பார்வையாளர்களால் தாங்கவியலாது. நாடகத்தின் துன்பச்சுவை பேருச்சத்திற்குச் சென்று விடும். இது ஏற்புடையதாகாது.

ஆதலால் கொலைக்களக்காதைக்கும் துன்பமாலைக்கும் இடையில் ஆய்ச்சியர் குரவை எனும் இன்பியல் பகுதி வைக்கப்பட்டு கோவலன் கொலையுண்ட காட்சி முடிந்தவுடனே கொண்டாட்டமும் குதூகளமுமாக பெண்கள் ஆடிப்பாடும் ஆச்சியர் குரவை நிகழ்வதன் வழி பார்வையாளரின் துன்பவியல் போக்கிற்கு ஓர் இடைவெளி கொடுக்கப்படுகின்றது. இவ்வுத்தியினையே பிற்கால ஐரோப்பிய நாடக மேதையான

சேக்ஸ்பியர் முதலானோர் தங்கள் நாடகங்களிற் கையாண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சிலப்பதிகாரக்கட்டமைவில் காதை அல்லாத எட்டுப்பகுதிகள் உள்ளன. இவற்றில் மங்கள வாழ்த்து திருமணப்பாடலாக அமைகின்றது. கானல்வரி, வேட்டுவவரி, ஊர்சூழ்வரி என்பன இசைப்பாடலாகவும் ஆய்ச்சியர் குரவை குன்றக்குரவை இசையும் ஆடலும் கலந்த நிகழ்வாகவும் துன்பமாலை வஞ்சினமாலை என்பன ஒருபொருள் பற்றிவந்த நிகழ்வாகவும் (மாலை - ஒருபொருள்பற்றி வரும் இலக்கிய வகைமை - துன்பமாலை என்பது துன்பமே முடிவாகக் கொண்டு வருவது) அமைந்துள்ளமை. இவை காதை எனும் நாடகக் கதையமைப்பிற்குத் துணை நிற்பனவாகின்றன வென்பதினை அறியலாம். தேவையான இடத்தில் நாடகப்போக்கை செம்மை செய்தும் சில இடங்களில் திருப்பங்களைச் செய்வதற்கும் இவ்வெட்டு பகுதிகளும் பங்காற்றுதலைக் காணலாம்.

ஒவ்வொரு கதை மாந்தருக்குமான தனிப்பட்ட இயல்புகள் வழங்கப்பட்டுள்ளமையால் நாடகப்போக்கு மிகவும் உயிரோட்ட முள்ளதாகச் சிலம்பில் அமைகின்றது. சான்றாக, கண்ணகியை தெய்வத்தன்மை நோக்கிக் கொண்டு செல்கின்ற போக்கில் அவளது இயல்பாக அதிகம் பேசாத பண்பும் வினாவிற்கு மாத்திரமே விடை பகரும் தன்மையும் உடையவளாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமை யினைக் குறிப்பிடலாம். தேவந்தியிடம் பேசுதலும், பாண்டி மன்னனிடம் பேசுதலும் வரந்தரு காதையில் தெய்வநிலையில் பேசுதலுமாக யாவும் வினாவற்கான விடையாகவே உள்ளமை யினையறியலாம். இவ்வாறான தனிப்பண்புகள் கதை மாந்தர் குறித்த மதிப்பீட்டினை பார்வையாளனுக்கு உண்டாக்குதலில் பெரும்பங்காற்றக் கூடியன.

நாடகப்போக்கை ஆற்றொழுங்கமையக் கொண்டு செல்வதிலும் துணைக்கதை மாந்தரின் பங்களிப்பு பெரிதாக அமைவதினைக் காணலாம். அதற்கான போக்கிலேயே கௌவுந்தி, மாதரி, கௌசிகன், மாடலமறையோன், மாங்காட்டுமறையோன் போன்றோரின் தன்மைகள் அமைவதாகின்றது. இவர்களில் பெரும்பாலானோர்

பார்ப்பனர்களாக இருத்தல் பற்றி வடமொழி நாடகக் கதை மாந்தரோடு, ஒட்டி ஆராயப்பட வேண்டியதாகின்றது.

காட்சிக் காதையில் மலைவளம் கூறும் பகுதிகளில் உள்ள பாடல்களில் காஞ்சித்திணைக்கும் வஞ்சித்திணைக்கும் பொறுந்துவதான துறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவை நாடகப்பாங்குடையவனவாக உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஒரு கதைக்குள் கிளைக்கதைகளை உருவாக்கிக் கொண்டு செல்லுதல் நாடகத்தினைப் பார்வையாளர்கள் சோர்வற்று விரும்பிக் காணுதலுக்கும் கலைஞர்களின் திறனுக்கும் ஏற்புடையனவாக அமையும். அவ்வகையில் பாசண்ட சாத்தன் கதை, மாலினி கீரிப்பிள்ளைக்கதை, நான்கு பூதங்களின் கதை, நீலிகதை என்பன போன்ற கதைகள் இடம்பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும். மாங்காட்டு மறையோன் பாண்டியர்களைப் புகழ் போற்றுதலும் செங்குட்டுவன் சாக்கையன் கூத்துக்காணல் முதலிய யாவும் நாடகப்பாங்குடையனவாகவே அமைதலைக் காணலாம்.

ஒரு நாடகத்தின் முடிவில் அறக்கருத்துக்களைக் கூறி நாடகத்தினை நிறைவு செய்தல் என்பது எங்கும் காணும் நாடக மங்கல மரபாகும் இதனையே சிலப்பதிகாரத்தில் இறுதிக்காதையான வரந்தரு காதையும் கூறுகிறது. இதனை,

“தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர்”

எனும் அடிதொடங்கி

“மல்லன்மா ஞாலத்து வாழ்வீ ரீங்கென்”

எனும் அடியீராகப் பதினெட்டு அடிகளில் மங்கல அறம் சொல்லி சிலப்பதிகாரம் முடிவு பெறுவது அதன் நாடகத் தன்மையைக் காட்டுவதாக அமைகிறது.

மேற்கண்டவற்றால் முத்தமிழ் காப்பியமான சிலப்பதிகாரத்தின் நாடகக்கட்டமைவுகள் குறித்து அறியலாம்.

****

இனவரைவியல் நோக்கில் பெரும்பாணாற்றுப்படை

முனைவர் இரா. பழனிச்சாமி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகக் கல்லூரி, மதுரை.

முன்னுரை

பத்துப் பாட்டினுள் பாடாண்திணை சார்ந்த ஆற்றுப்படை என்னும் துறை சார்ந்த ஐந்து நூல்கள் இடம் பெற்றுள்ளன. அவை திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடுகடாம் (எ) கூத்தராற்றுப்படை என்பவாகும். இவை பண்டையத் தமிழர் வாழ்வியலைத் தெளிவாகப் பதிவு செய்துள்ளன. இலக்கியம் என்பது மக்களின் வாழ்வியலை அடிப்படையாகக் கொண்டது. ஒரு மொழியும் அதில் எழுதப்பட்டுள்ள இலக்கியங்களும் பண்பட்டவையாக இருக்கின்றன எனில் அங்கு வாழும் இனத்தார் பண்பட்ட வாழ்வியலுக்குச் சொந்தக்காரர்கள் என்பது தெளிவாகும்.

கோட்பாடுகள் என்பவை மேலைநாட்டினரின் தொடர்பால் வந்தவை. ஆனால் அவற்றை உருவாக்கியவர்கள் ஏற்கனவே படைக்கப்பட்ட படைப்புகளை முன்மாதிரியாகக் கொண்டே அவற்றை உருவாக்கி இருக்க முடியும். அவ்வகையில் முன்னைப் பழமைக்கும் பழமையாய் பின்னைப் புதுமைக்கும் பெற்றியுடையதாய் திகழும் தமிழ்மொழியில் எழுதப்பட்ட இலக்கியங்கள் இன்றைய நவீனக் கோட்பாடுகளின் கூறுகளைப் பெற்றுள்ளன. இன்னும் தெளிவாகக் கூறவேண்டுமானால் இத்தகைய இலக்கியப் படைப்பு களின் பின்புலத்தில்தான் கோட்பாடுகளே உருப்பெற்றனவோ என எண்ணும்படியாக அவற்றின் பொருத்தம் நம்மை வியக்க

வைக்கின்றன. அவ்வகையில் இனவரைவியல் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் பெரும்பாணாற்றுப்படையை அணுகி விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

ஆற்றுப்படை-இலக்கணம்

வறுமையால் பசியோடு இருக்கும் கலைஞர் கூட்டத்தைப் பரிசில் பெற்று எதிர்வரும் கலைஞனாகிய இரவலன் ஒருவன் "யாம் பரிசில் பெற்ற இன்ன வள்ளலிடம் நீவிரும் சென்று பரிசில் பெறுக" என்று ஆற்றுப்படுத்துவது ஆற்றுப்படை இலக்கியங்கள் சொல்லவரும் செய்தியாகும். இதுவே இத்தகு பாடல்களில் இடம்பெறும் முக்கியமான செய்தியாகும்.

கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்

ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்

பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்

சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்

(தொல்-புறத்திணையியல், நூ.எ.30)

எனத் தொல்காப்பியம் ஆற்றுப்படையின் இலக்கணத்தை வரையறை செய்கின்றது. இவ்விலக்கணமே இனவரைவியல் சார்ந்தது எனத் துணியலாம். தம்மைப் போன்ற இனத்தானை எவ்வாறு பொருள் பெற்று வளமையைத் தேடிக்கொள்ள வேண்டும் என்று ஆற்றுப்படுத்துவது மனித இனத்தின் உயரிய பண்பாக உள்ளதை இனக்குழுச் சமூகத்தின் சிறப்பெனவும் எண்ண வாய்ப்புள்ளது.

ஆற்றுப்படை நூல்களின் அமைப்பு:

ஆற்றுப்படை நூல்களில் திருமுருகாற்றுப்படையினைத் தவிர பிறநூல்கள் அனைத்தும் ஒரே அமைப்பினை உடையன. அவை,

- வேனிற் காலத்தின் இயல்பு
- வறுமையுற்ற பாணனின் நிலை
- விறலியரின் அழகு
- பரிசில் பெற்று வறுமை நீங்கிய பாணன் சந்தித்தல்
- தான் கண்ட வள்ளலின் கொடைத்தன்மை பற்றிக் கூறல்
- நாடு, நகரங்களின் சிறப்புக்கள்
- நில மக்களின் விருந்தோம்பும் பண்பு
- வள்ளலின் அரண்மனைச் சிறப்பு
- விருந்தினரை அவன் வரவேற்கும் திறம்
- பரிசில் வழங்கி அனுப்பும் தன்மை

என்பவைகளாகும்.

இனவரைவியல் - விளக்கம்

இனவரைவியல் என்னும் தமிழ்ச்சொல் 'Ethnography' என்னும் ஆங்கிலச் சொல்லின் மொழிபெயர்ப்பாகும். Ethnography என்ற ஆங்கிலச் சொல் 'Ethnos', 'grapheien' என்ற கிரேக்கச் சொற்களின் மூலங்களைப் பெற்றது. Ethnos என்பதற்கு இனம் (race), இனக்குழு (Ethnic group), மக்கள் (people) என்பது பொருள். grapheien என்பதற்கு எழுதுவது அல்லது வரைதல் என்பது பொருள். **(பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், ப.117)** இவ்வகையில் நோக்கும்போது மனித இனத்தினைப் பற்றி எழுதப்படும் எவ்வகைப் படைப்பாக இருந்தாலும் அது இனவரைவியலின் கூறுகளை உள்ளடக்கியதாகவே இருக்கும்.

"ஒரு குறிப்பிட்ட மனித சமுதாயத்தையோ, ஒரு நாட்டினையோ அல்லது ஒரு சாதியினையோ பற்றி விளக்கமாக ஆராய்வது இனவரைவியலாகும்". (www.answers.com / topic / ethnography - 16k, http:// www. answers.com / topic/ethnography - 16k) மனித இனம் சார்ந்த எந்தவொரு விஷயத்தைப் பற்றிப்

பேசினாலும் அதில் இனவரைவியல் என்ற கூறு வெளிப்படையாகவோ உள்ளார்ந்தோ காணப்படும்.

"1834ஆம் ஆண்டு ஜெர்மானிய மொழியில் வெளிவந்த பென்னி சைக்ளோபேடியோ பாகம் இரண்டிலிருந்து இச்சொல்லை ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதி எடுத்தாண்டது" (மேலது)

இச்சொல்லை ஜெர்மானிய எழுத்தாளர்கள் மானிடவரைவியல் (anthropography) என்ற பொருளில் கையாண்டனர். மனித இனத்தின் தனித்த குழுக்களின் வாழ்வியலை ஆய்வு செய்யக்கூடிய "**இனக்குழுவியல்**' (Ethnology) என்ற சொல்லை ரிச்சர்ட்ஸ் என்பவரின் '**மனிதனைப் பற்றிய இயற்கை வரலாறு' (1842)** என்னும் நூலில் இருந்து ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதி எடுத்தாண்டது.

அடிப்படையில் இந்தச் சொல்லானது ஒரு நாட்டோடு தொடர்புபடுத்திக் காட்டப்பட்டது. ஆனால் தற்போது சமூகவியல் அறிஞர்களாலும், மானிடவியல் அறிஞர்களாலும் இதற்குப் புது விளக்கங்கள் கொடுக்கப்படுகிறது. அதாவது சிறப்பான முறையில் பண்பாடுகளையும், கலாச்சாரத்தையும் கொண்டுள்ள மக்களின் பிரிவுகளே இனக்குழு என்பதாகும். (International Encyclopaedia of the Social Sciences, Volume-5, p.173)

ஒரு குறிப்பிட்ட இனத்தினுடைய பழக்கவழக்கங்களை எழுதுதல் என்பது இதற்கான பொருள் ஆகும். இது சமூக, பண்பாட்டு மானிடவியலின் அடிப்படைக் கூறுகளில் ஒன்றாகும். மானிடவியலாரின் கோட்பாட்டின்படி இனவரைவியல் என்பது முழுமையான, துல்லியமான மற்றும் உணர்வுப்பூர்வமான நிலையை ஆதாரமாகக் கொண்டுள்ளது. (The New Encyclopaedia Britannica in 30 volumes Volume III, p.980) குறிப்பாக ஜாதி, பழங்குடியினர் மற்றும் பிரதேசக்குழு ஆகியவற்றையும் வகுப்பு அல்லது நிறுவனங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகளையும் பற்றிய படிப்பு ஆகும். இது இரண்டு நிலையினைக் கொண்டுள்ளது.

"இனம் பொது மரபில் இணைந்தகுழு, மரபுக்குழு, கால்வழிக்குழு, வழிமரபு, தனிவேறான மரபினக்குழு, பொதுமரபுக்குழு, பொது மரபுடைய குலத்தொகுதி, உயிரினம், விலங்கு, தாவரங்களின் வகைகள்,

மரபு, உறவு, குலம், வகுப்பினம், பொதுவான சிறப்புக் கூறுகளை உடையவர்களின் தொகுதி' (English - Tamil Dictionary, University of Madras - p.357)எனப் பொருள் கொள்ளப்படுகின்றது.

இது நவீன காலத்தின் மாற்றங்களுக்கு உட்பட்டு மரபு சார்ந்த பண்பாட்டு ரீதியிலான மாற்றங்கொண்டது. இனவியல் ஆய்வுப் பிரிவுகளில் ஒன்றான உற்று நோக்குதலை அடிப்படையாகக் கொண்டது. ஒவ்வொரு பண்பாடு குறித்தும், மொழி, உடற்கூறுப் பண்புகள், பொருள் உற்பத்தி மற்றும் சமூகப் பழக்க வழக்கங்களைப் பற்றி விவரிப்பது ஆகும். (Funk & Wagalls, New Encyclopaedia, Volume 9 - 385)

"ஓர் அயற் பண்பாட்டை விளக்க முற்படும் எந்தவொரு சிறந்த இனவரைவியல் தொகுப்பும் பின்வரும் முதன்மையான கூறுகளைப் பற்றி விளக்குவதாக அமையும். அவை - புவிச் சூழலியல் (Topography), சுற்றுச்சூழல் (environment), காலநிலை (climate), குடியிருப்புமுறை (settlement pattern), பொருள்சார் பண்பாடு (material culture), குடும்ப அமைப்பு, திருமண முறை, உறைவிடமுறை (residence pattern), வாழ்வியற் சடங்குகள், குழந்தை வளர்ப்பு முறை, பண்பாட்டு வயமாக்கமுறை, மக்களின் உளவியற் பாங்குகள், மணக்கொடை, மதுவிலக்குமுறை, வாழ்க்கைப் பொருளாதாரம், தொழிற்பகுப்பு, உற்பத்திமுறை, நுகர்வு முறை, பங்கீட்டு முறை, பரிமாற்ற முறை, கைவினைத் தொழில்கள், அரசியல் முறை, அதிகார உறவுகள், சமூகக் கட்டுப்பாடு, மரபுசார் சட்டங்கள், சமய நம்பிக்கைகள், சடங்குகள், வழிபாட்டு முறைகள்,

ஓர் இனக்குழுவை நேரடியாக
ஆய்வுக்குட்படுத்தும் முறையியலாகும்.
பண்பாட்டை எழுத்து வடிவில்
தொகுத்து அளிப்பதே இனவரைவியலின்
நோக்கமாகும். இதனால்...

மந்திரம், சூனியம், விழாக்கள், இசை, விளையாட்டுகள், அழகியற் சிந்தனைகள், வழக்காறுகள், ஈமச் சடங்குகள், பிற தொடர்புடைய செய்திகள் முதலியன. அவ்வாறு தொகுக்கப்படும் செய்திகள் ஒரு தனிப்பட்ட சமூகத்தைப் பற்றியதாக இருப்பதால் இனவரைவியல் நூல்கள் அனைத்தும் தனிவரைவு நூல்கள் (monographs) எனக் கூறப்பெறும்." (பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், ப.118) எனும் விளக்கம் சமூகத்தின் ஒட்டுமொத்தப் பண்புகளை அடிப்படையாகக் கொண்டதாகும்.

பண்பாட்டு ஆய்வுகளுக்கு இனவரைவியல் அடிப்படையானதாகும். ஒரு குறிப்பிட்ட இனக்குழுவை அல்லது பண்பாட்டை விளக்கும் கலை அல்லது அறிவியல் இனவரைவியல் என்று அழைக்கப்படும் (Fetterman.p.989:11) **(ஞா.ஸ்டீபன், தொல்காப்பியமும் இனவரைவியல் கவிதையியலும், ப.2)**. இது ஒரு குழு அல்லது ஓர் இனக்குழுவை நேரடியாக ஆய்வுக்குட்படுத்தும் முறையியலாகும். பண்பாட்டை எழுத்து வடிவில் தொகுத்து அளிப்பதே இனவரைவியலின் நோக்கமாகும். இதனால் ஏதேனும் ஒரு பண்பாட்டைப் பற்றி எழுதப்பெற்ற வரைவு அல்லது வருணனையை இனவரைவியல் என்று அழைப்பர்.

இனவரைவியல் இரண்டு வகையான பரிமாணங்களைக் கொண்டது. ஒரு பக்கத்தில் அதுவொரு முறையியலாகவும் மறுபக்கத்தில் வரிவடிவமாக்கப் பெற்ற பண்பாடாகவும் அமைகின்றது. யாரைப்பற்றி எழுதுகிறோமோ அந்த மக்களின் வாழ்க்கை முறையைப் பற்றிய விளக்கவுரைகளையும் வரைவு அறிக்கைகளையும் உருவாக்கக் கூடிய அலசல் முறையும் அதன் வெளிப்பாடாகிய எழுத்து வடிவமுமே இனவரைவியல் (Denzin

பார்த்தான்கள் என்பவர்கள் பாணர்
மரபினைச் சேர்ந்தவர்கள் என
அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
இவர்களின் கைகளில் உள்ள இசைக்
கருவியின் பெயர்...

1977 XI) என அதன் பரிமாணங்கள் விளக்கப்படுகின்றன.

மேலே கண்ட இனவரைவியல் பற்றிய விளக்கங்களை அடிப்படையாகக் கொண்டு பெரும்பாணாற்றுப்படையில் இடம்பெற்றுள்ள இனங்கள் குறித்தும் அவற்றின் பண்பாடு, தொழில், ஒப்பனை, சடங்குகள், உணவுகள், விருந்தளித்தல் என்பவைகளை இனவரைவியல் அடிப்படையில் இனிக் காண்போம்.

பாணன்

பாணன் என்ற குடியினர் பழங்காலம் தொட்டே வாழ்ந்து வருவதை இலக்கியப் பதிவுகள் காட்டுகின்றன. இவர்கள் சமூகத்தின் மிக முக்கியமான இடத்தைப் பிடித்திருந்தவர்கள் என்பதை,

துடியன் பாணன் பறையன் கடம்பன் என்று

இந்நான்கு அல்லது குடியும் இல்லை (புறநானூறு-பா.335.7-8)

என்ற புறநானூற்று வரிகள் நமக்குத் தெளிவுபடுத்துகின்றன. ஆற்றுப்படை பாணர்களை அவர்கள் வைத்துள்ள யாழின் அமைப்பினை வைத்து பெரும்பாணன், சிறுபாணன் என்று பாகுபாடு செய்கின்றது. எனினும் இவர்கள் யாழ்ப்பாணர், இசைப்பாணர், மண்டைப்பாணர் என மூவகைப்படுவர்.

பாணர்கள் கல்வி, கேள்விகளில் வல்லவர்கள். மிகுந்த சொல்வன்மை மிக்கவர்கள். தமிழக இனக்குழு மரபு பாணர்களிலிருந்து தொடங்குவதாகவும், அதிலிருந்து தொழிற்வயப்பட்டே புலவர் மரபு வந்ததாகவும் பக்தவத்சல பாரதி கூறுகிறார். சங்க இலக்கியம் பாடகர் மரபினரை "முதுவாய்ப் பாணன்" **(புறம்.319)** "முதுவாய் இரவல" **(புறம்.48)** எனக் குறிப்பிடுகின்றது. பாணர்கள் பொதுவாக வறுமை நிலையிலேயே இருந்துள்ளனர். உணவுத் தேவைகளுக்காக ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குப் புலம் பெயரும் நாடோடி வாழ்க்கையை மேற்கொண்டிருந்தனர். இதனை ஒட்டியே பெரும்பாணாற்றுப்

படையும் பாணர் பற்றிய பதிவினைத் தருகின்றது.

பழுமரம் தேரும் பறவை போல

கல்லென் சுற்றமொடு கால் கிளர்ந்து திரிதரும்

புல்லென் யாக்கைப் புலவுவாய்ப் பாண (19-21)

எனக் கூறுவதில் வறுமையுற்று அதே சமயம் பரிசில் கொடுக்கவோ, உணவு வழங்கவோ யாரும் இல்லாததால் பழுத்த பழம் உள்ள மரத்தைத் தேடித் திரியும் பறவைக் கூட்டங்களைப் போன்று, அழுது புலம்பும் சுற்றத்தினருடன், ஓரிடத்து இராமல் பயனின்றி ஓடித் திரிகின்ற பொலிவிழந்த வடிவினையும், கற்ற கல்வியை வெறுத்துப் பேசுகின்ற வாயினை உடையவனாகவும் பாணனைக் காட்டுகின்றது. வறுமை வந்தால் அனைத்தும் பறந்து போகும், மறந்து போகும் என்பதற்குச் சான்றாகப் பாணர்களின் வாழ்வு அமைகின்றது.

பாணன் என்பவன் பாடல் பாடுபவன் என்பதுவும், அவன் எப்பொழுதும் பெருங்கூட்டத்தாருடன் இருப்பவன், வறுமையில் உழல்பவன், பொலிவிழந்த உருவத்தினை உடையவன் என்பது பாணர் குறித்த வரைவியலாகக் காண முடிகின்றது.

இப்பாணர்களின் மரபு அன்று முதல் இன்று வரை தொடரும் மரபாக உள்ளதை இனங்காண முடிகின்றது. நடுஇந்தியாவில் வசிக்கும் கோண்டு இன மக்களுக்குச் சேவகம் செய்து வாழும் பார்த்தான்கள் என்பவர்கள் பாணர் மரபினைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களின் கைகளில் உள்ள இசைக் கருவியின் பெயர் பாணா (Bana) என்பதாகும். இதனைப் போன்றே தமிழகத்தில் ஒவ்வொரு சாதியினருக்கும் சேவகம் செய்து பிழைக்கும் சாதிக் குடிப் பிள்ளைகள் என்பவர்கள் இப்பாணர் மரபினை உடையவர்கள் ஆவர்.

1. வன்னியர் - சாதிப்பிள்ளை நோக்கர்
2. கொங்கு வேளாளர் - முடவாண்டி

3. கோமட்டி - மைலாரி
4. பிராமணர்கள் - பீதாம்பர ஐயர்
5. ரெட்டி - பட்ராசு
6. முதலியார் - சுக்கிலவன்
7. யாதவர் - எடக் கூத்தாடி
8. சக்கிலி - பொம்மநாயுடு / ஜெண்டடுவாரு
9. பறையர் - பறைக் கொம்பன்
10. இஸ்லாமியர் - பக்கீர்

எனக் குறிக்கப்படுபவர்கள் பாணர் மரபினைச் சார்ந்தவர்கள் ஆவர். பாணர் என்ற இனம் எப்பொழுதும் ஏதாவது ஒரு இனத்தைச் சார்ந்து வாழும் இனமாக இருப்பதால் பலவகையாகச் சாதி பிரிவுபட்டபொழுது அவர்களும் பல பெயருடன் அழைக்கப்படுவதற்கான வாய்ப்புகள் தோன்றியுள்ளன. எனவேதான் அவர்கள் தற்பொழுது ஒரு இனமாக இல்லாமல் பல சாதிகளுக்குள் புதையுண்டு வாழும் இனமாகப் பரவியுள்ளனர் என்பதை அறியமுடிகின்றது.

உப்பு வாணிகர் (உமணர்)

நெய்தல் நில மக்களின் தொழில்களாகக் கூறப்படுபவை உப்புக் காய்ச்சலும், மீன் பிடித்தலுமாகும். இந்நிலம் குறித்துக் கூறும் தொல்காப்பியர் **"வருணன் மேய பெருமணல் உலகமும்"** (தொல்காப்பியம்-அகத்திணையியல்,நூ.5) எனக் குறிக்கின்றார். பெரும்பாணாற்றுப்படை உப்பு வாணிகம் செய்யும் மக்கள் பற்றிக் கூறுகிறது. உப்பு விற்கப் பயன்படும் வண்டி குறித்த செய்தியினைக் கூறும்பொழுது,

கொழுஞ்சூட்டு அருந்திய, திருந்துநிலை ஆரத்து,

முழவின் அன்ன முழுமர உருளி,

எழூஉப் புணர்ந்தன்ன பரூஉக்கை நோன்பார்,

மாரிக் குன்றம் மழை சுமந்தன்ன

ஆரை வேய்ந்த அறைவாய்ச் சகடம் (46–50)

எனக் கூறுவதில் வண்டியின் ஆரம், மத்தளம் போன்ற உருளி, கணைய மரம் போன்ற பார், மழைமுகில் போன்ற பாயால் வேயப்பட்ட கூரை, அதோடு கோழி கிடக்கும் கூடு, துளையிடப்பட்ட சிறிய உரல், உமணர் மகள் வண்டி கட்டும் சிறப்பு என்பவை கூறப்பட்டுள்ளன. இதில் உமணர்கள் என்ற இனம் பற்றிய வரைவு என நோக்கும் பொழுது அவர்களின் தொழிலை அடிப்படையாகக் கொண்டு வரையறை செய்வதோடு, உமணர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதனை அடையாளம் காட்ட அடையாள மாலை அணிவர். இந்நூலுள் வரும் உமணன் பாண்டிய நாட்டினைச் சேர்ந்தவன் என்பதால் வேப்பந்தழையுடன் கூடிய தழைகள் விரவித் தொடுத்த மாலையை அணிந்திருந்தான் எனக்கூறப்படு வதைக் கவனமாக நோக்க வேண்டும். இன அடையாளம் என்பது அப்போதைய போர்ச்சூழலில் மிக முக்கியமானதாக இருந்திருக்க வாய்ப்புள்ளது. மேலும் முழுவலிமாக்கள் என்பது அவர்களின் உடல் வலிமையைக் குறித்தது. வண்டி மணலில் அழுந்தும் பொழுது அதனைத் தள்ளுவதற்கும், உப்பு மூட்டையை ஏற்றி இறக்கவும் கூடிய உடல் வலிமை பெற்றிருந்ததை அவ்வினத்திற்கான அடையாளமாகச் சுட்டுவதைக் காண முடிகின்றது.

"**பல் எருத்து உமணர்**" என்பது எருதுகளுக்கு மாற்று எருது வைத்திருப்பர் என்பதைக் குறிப்பிடுகிறது. அதோடு உப்பினை விற்று நெல்லைப் பெற்று அதனை உரலில் இட்டுக் குத்தி அரிசியாக்கிச் சமைத்து உண்ணும் உமணர்களின் வழக்கமும்,

நெல்லும் உப்பும் நேரே ஊரீர்

கொள்ளீரோ

என்பதன் மூலம் அறியலாம். அவர்கள் வண்டியில் அமர்ந்திருக்கும் காட்சி கடம்ப மரத்தில் அமர்ந்திருக்கும் முருகனது வீரத்தையும், கையில் உள்ள சாட்டை முருகன் கையில்

உள்ள வேலினைப் போன்றும் உள்ளதாகக் கூறுவதோடு, புறமுதுகிட்டு ஓடாத பெருமைக்குரியவர்களாக இவ் உமணர்கள் இருந்தனர் என்பது இவ்வினம் பற்றிய வரைதலுக்கு அடிப்படையாக அமைகின்றது.

எயினர் - எயிற்றியர்

பாலை நில மக்களாகக் கூறப்படும் எயினர்கள், எயிற்றியர் பற்றிய செய்திகள் பெரும்பாணாற்றுப் படையில் பதிவு பெற்றுள்ளது. அவர்கள் தங்கியுள்ள குடிசை பற்றிக் கூறும்பொழுது "பன்றியின் முதுகு" போன்ற புறம் உடைய குடில் எனக் கூறப்படுகிறது. அதோடு அண்மையில் குழந்தையினை ஈன்ற எயிற்றி "மான் தோல் படுக்கையில் ஈன்ற குழந்தையுடன் முடங்கிக் கிடக்கும்" செய்தி பதிவு செய்யப்பட்டுள்ளது. அதோடு அவர்கள் உண்ண உணவு இல்லாமையால் எறும்புப் புற்றைக் குத்தி, புழுதியை நீக்கிவிட்டு எடுத்த புல்லரிசியால் உணவு சமைப்பர் என்ற பண்பாட்டுச் செய்தியும் இடம் பெற்றுள்ளது. மேலும் அவ்வாறு எடுத்த புல்லரிசிச் சோற்றைக் கருவாட்டோடு சேர்த்து, தேக்கிலையில் குவித்து விருந்தினர்களுக்குத் தருவர் என்ற விருந்து பற்றிய செய்தியும் இடம்பெறுகிறது.

'பார்வை மான்' வளர்த்து அம்மானைக் காட்டி மானைப் பிடிக்கும் வழக்கம் இருந்தது தொழில் சார்ந்த செய்தியாகும். இம்மக்கள் 'நிலவுரல்' என்ற ஒன்றைப் பயன்படுத்துவர். ஆழமான கிணற்றிலிருந்து தானாக ஊறும் உவர் நீரைக் குடிநீராகப் பயன்படுத்துவர். 'நெடுங்கிணற்று வல் ஊற்று' 'உவரி தோண்டி' என்ற வரிகள் மெய்ப்பிக்கின்றன. இவர்கள் பயன்படுத்தும் பானை

பறவைகள் எழும்பொழுது ஆயர் மகள்
எழுந்து தன் கடமையினைச் செய்யத்
தொடங்குவாள். வெண்ணெய் எடுத்த பிறகு
மோரைப் பானையில் ஊற்றுவாள். பின்பு
மோரை விற்று அதில் கிடைத்த...

"முரவுவாய்க்குழிசி" எனப்படுகிறது. அதாவது விளிம்பு உடைந்து போன கரடுமுரடான பழையபானையைப் பயன்படுத்துவர்.

நடுஇரவில் நீருண்ண வரும் பன்றிகளின் வருகையை எதிர்பார்த்து எயினர்கள் நிற்பர். பன்றிகள் இரவில் அகப்பட வில்லையென்றால் பகலில் வலைகட்டி முயல்களைப் பிடிப்பர். அதற்கு நாயின் துணையைப் பயன்படுத்துவர் என்ற செய்தியும் கூறப்படுகின்றன. எயினர்களின் இல்லத்திற்குச் சென்றால் சிவந்த சோற்றோடு, நாய்கள் கடித்துக் கொன்று வந்து கொடுத்த உடும்பின் பொரியல் உணவாகக் கிடைக்கும் என்பது விருந்து பற்றிய இவர்களது இனவரைவியல் பண்பாகும்.

குறவர்

"சேயோன் மேய மைவரை உலகம்'(தொல்.அகத். நூ.5) எனக் கூறப்படும் குறிஞ்சி நில மக்களாகிய குறவர்கள் யானை தாக்க வந்தாலோ, தம்மேல் பாம்பு ஊர்ந்து சென்றாலோ, இடி இடித்தாலோ அங்குள்ள கர்ப்பமாக இருக்கும் பெண் கூட இவற்றிற்கெல்லாம் அஞ்ச மாட்டாள் என்ற வீரத்தன்மை மிகுதியும் உடையவர்கள். புலி போன்ற வீரமும், பகை மன்னருடைய பசுக்கூட்டங்களைக் கவரும் வீரமும் உடையவர்கள். தம்முடைய பசுவினைக் கொடுத்து கள் குடித்த கடனைத் தீர்ப்பவன், எயிறு மன்றத்தில் ஆண் எருதினை அறுத்து உண்ணக் கூடியவன். வேட்டைக்குச் செல்லும்பொழுது தம் சுற்றத்தாரையும் நாயினையும் உடன் அழைத்துச் செல்பவன். **"செல் நாய் அன்ன கருவில் சுற்றமொடு"** என்பதை உணர்த்துகின்றது. வீட்டில் நெல்லாற் சமைத்த கள்ளினை உண்ணும் பழக்கமுடையவன் எனக் கூறுவது குறவர்களின் இனவரைவியல் பண்புகளைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

யானை தாக்கினும், அரவுமேல் செலினும்

நீல்நிற விசும்பின் வல்ஏறு சிலைப்பினும்

சூல்மகள் மாறா மறம்பூண் வாழ்க்கை (134-136)

என்பது அவர்களது அச்சமற்ற வாழ்விற்குச் சான்றாகும்.

கோவலர் - ஆயர்

முல்லை நில மக்களாகிய ஆயர்கள் என்பவர்களைக் கோவலர் என்ற சொல்லாலும் குறிப்பர்.

ஆ காத்து ஓம்பி ஆப்பயன் அளிக்கும்

கோவலர் வாழ்க்கை ஒரு கொடும்பாடில்லை

(சிலம்பு-அடைக்கலக்காதை.120-121)

என்கிறது சிலப்பதிகாரம். **'மாயோன் மேய காடுறை உலகமும்'** எனத் தொல்காப்பியம் இதன் தெய்வம் பற்றியும், நிலம் பற்றியும் குறிப்பிடுகின்றது. பெரும்பாணாற்றுப்படை இம்மக்களை **இடையர்** எனும் வார்த்தையில் குறிக்கின்றது.

இவர்களின் வாழிடம் ஆடுகள் நின்று தின்னும் அளவிற்கு குறுகிய காலினையுடைய குடில். அதன் கதவு கழியால் அமைக்கப்பட்டுள்ளது. தோலினால் அமைக்கப்பட்ட படுக்கையில் இடையன் உறங்குகின்றான். முற்றத்தில் செம்மறி, வெள்ளாடுகள் நீண்ட கயிற்றில் கட்டுப்பட்டுக் கிடக்கும். பறவைகள் எழும்பொழுது ஆயர் மகள் எழுந்து தன் கடமையினைச் செய்யத் தொடங்குவாள். வெண்ணெய் எடுத்த பிறகு மோரைப் பானையில் ஊற்றுவாள். பின்பு மோரை விற்று அதில் கிடைத்த பொருட்களின் மூலம் நெய் முதலிய உணவால் சுற்றத்தார் அனைவரையும் உண்ணச் செய்வாள். நெய் விற்ற பணத்திற்குக் கட்டிப் பசும்பொன்னை வாங்க விரும்பாமல் எருமையையும், நல்ல பசுக்களையும் அவற்றின் கன்றுகளோடு வாங்குகின்றாள். அங்கு வரும் விருந்தினருக்கு நண்டின் பார்ப்பைப் போன்ற பசிய தினையால் ஆக்கிய சோற்றினை வழங்குவாள் என்பதை,

குளகு அரை யாத்த குறுங்கால் குரம்பை

செற்றை வாயில் செறிகழிக் கதவின்

... .

நெய்விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளாள்

எருமை, நல் ஆன், கருநாகு பெறூஉம்

மடிவாய்க் கோவலர் குடிவயிற் சேப்பின்

இருங்கிளை ஞெண்டின் சிறுபார்ப்பு அன்ன

பசுந்தினை மூரல் பாலொடும் பெறுகுவிர் (148-168)

எனக் கூறுவதன் மூலம் அறிய முடிகின்றது. மேலே கண்ட செய்திகளின் வழியே முல்லை நிலத்தில் வாழும் இடையர்களின் தொழில், பண்பாடு, வாழிடம் என அவர்களின் இனத்தின் அனைத்துக் கூறுகளையும் அடையாளம் காண முடிகின்றது.

இவர்களின் உடல் பற்றிய சிந்தனையில் செருப்பு விடாமற் கிடந்ததனால் வடு அழுந்திய வலிய கால்கள். உறுதியான கோலை ஊன்றிய கோடரித் தழும்பு இருந்த வலிய கைகள். இரு தலைகளிலும் குடங்கள் மேலே இருந்ததனால் உண்டாகிய தழும்பு மிக்க மயிர் எழுந்த தோள்கள். ஆவின் பாலைத் தடவின மயிர், கழுத்தில் மாலை, ஒற்றை ஆடை, பாற்சோறு இவற்றினை உடையவனாக இடையன் உள்ளதைக் குறிப்பிடுகிறது.

தலையில் சூர்ப் பூக்களைச் சூடியிருப்பர்.
இவர்களது உணவு பெரும்பாலும் மீன்
சார்ந்ததாகவே அமைந்திருக்கும்.
மேபுக்கிடாய்களும், நாய்களும் சுழன்று
திரியும் தெருக்கள். இவ்வினப் பெண்கள்...

தொடு தோல் மரீஇய வடுஆழ் நோன்கடி
விழுத்தண்டு ஊன்றிய மழுத்தின் வன்கை
உறிக்கா ஊர்ந்த மறுப்படு மயிர்ச்சுவல்
மேம்பால் உரைத்த ஓரி, ஓங்குமிசைக்
கோட்டவும் கொடியவும் விரைஇ, காட்ட
பல்பூ மிடைந்த படலைக் கண்ணி
ஒன்று தமர் உடுக்கை, கூழ்ஆர் இடையன் (169-175)

இவர்களுக்கான இனப் பண்பாகத் தழும்பு பதிந்த கால்கள், ஆவினங்களுக்கு இலை பறிக்கக் கையில் கோலை வைத்திருத்தல், புல்லாங்குழல் வைத்திருத்தல், பாற்சோறை மூட்டையாகக் கட்டி அதனைக் கோலில் இணைத்து, காவடி போன்று சார்த்திக் கொண்டு போதல், அக்கோல் அழுத்திய வடுவினைத் தோளில் தாங்கியிருத்தல், பலவகையான பூக்களையும் பறித்து மாலையாகக் கட்டி அணிந்து கொள்ளும் நிலை, ஒரே ஆடை மட்டும் அணியும் வழக்கம் என்பவை சுட்டிக் காட்டப்படுகின்றன. இத்தகு உருவம் உடையவர் இன்ன இனத்தார் என்பதை இனவரைவியல் அடிப்படையில் அடையாளம் காணும் வகையில் மேலே கண்ட பதிவு உள்ளதை உணரலாம்.

உழவர்கள்

மருத நிலத்துக்குச் சொந்தக்காரர்களாக விளங்கும் உழவர்களைத் தொல்காப்பியம் **"வேந்தன் மேய தீம்புனல் உலகமும்"** எனக் குறிக்கின்றது. இவர்களை ஊரன், மகிழ்நன் என்றும் அழைப்பர். இது தலைமக்களுக்கான பெயராகும். இவர்கள் உழவுத் தொழில் செய்பவர்கள்.

குடிநிறை வல்சிக் செஞ்சால் உழவர்

நடைநவில் பெரும்பகடு புதவில் பூட்டி (197–198)

எனக் கூறப்படுவதில் செஞ்சால் உழவர் என்ற சொல் கவனிக்கத்தக்கது. இவர்கள் காடு திருத்தி, நாடாக்கி, வயலைச் சேறாக்கி, சேற்றினைச் சமப்படுத்தி, நெல் முடியினை நட்டு, நெல்லாக்கி, உலகிற்குச் சோறு படைத்த பெருமைக்குரியவர்கள். உணவு எனும் பொழுது நெல் சோறும் நண்டுக் குழம்பும் இவர்களுக்கானதாக உள்ளது. அதோடு **அவல்**" இடித்து உண்ணும் வழக்கமும் இவ்வின மக்களுக்கானதாக இருந்துள்ளது. இவர்களைச் சங்க இலக்கியங்கள் உழவர்கள், களமர்கள் என வகைப்படுத்திக் கூறுகிறது. "**களமர்**" என்பவர் களத்து மேட்டில் வேலை செய்பவர்களைக் குறித்தது. இவர்களின் வீட்டின் முன்பு "**நெற்கூடுகள்**" நிறைந்திருக்கும். பசி – வறுமை என்பதை அறிந்திராத குடியிருப்பினை உடையவர்கள். இவர்களது இல்லங்களில் கோழி, நாய் முதலியவற்றை வளர்ப்பர்.

மேலேகண்ட செய்திகளின் வழியாக உழவர்கள் என்ற இனத்தைப் பற்றியும் அவர்களது செயல்பாடுகள் குறித்தான பதிவுகளைப் பற்றியும் அறியலாம். "**தோப்பு உழவர்கள்**" என்ற தென்னந் தோப்புகளை உழவு செய்பவர்கள் பற்றிய செய்தியும் உள்ளது. பலாப்பழம், இளநீர், நுங்கு, வாழைப்பழம் முதலியவற்றை விருந்தினர்களுக்கு அளிப்பர். தூரமாக அமைந்த வீடுகளை உடையவர்களாக இவர்கள் இருந்ததைப் பெரும்பாணாற்றுப்படை பதிவு செய்துள்ளது. உலகத்தார்க்கு நிலையான வாழ்வின் இனிமையையும், நாகரிகத்தையும் கற்றுக் கொடுத்த தனிச் சிறப்புடைய இனத்தார் மருதநிலக் குடிகளாவர்.

வலைஞர் - பரதவர்

நெய்தல் நில மக்களாகிய பரதவர் '**வருணன் மேய பெருமணல் உலகமும்**' சார்ந்தவர்கள். இவர்களின் தொழில் '**மீன் பிடித்தல்**' என்பதாகும். எனவே இவர்களின் குடிசைகளில் மீனை வாரி எடுத்துப் போடும் '**பறி**' என்ற கருவியைத் தொங்க விட்டிருப்பர்.

இவர்கள் நெய்யரியாலே வடிகட்டப்பட்ட பழஞ்சோற்றினால் உருவாக்கப்பட்ட கள்ளை உண்பவர்கள். தலையில் சூர்ப் பூக்களைச் சூடியிருப்பர். இவர்களது உணவு பெரும்பாலும் மீன் சார்ந்ததாகவே அமைந்திருக்கும். மேபுக்கிடாய்களும், நாய்களும் சுழன்று திரியும் தெருக்கள். இவ்வினப் பெண்கள் வானத்தைத் தீண்டும் மாளிகையின் மேல்மாடத்தில் பந்தாடுவர். குழி வெட்டி அதற்குள் விடப்பட்ட இணைவிழைச்சில் ஈடுபடாத ஆண் பன்றிக் கறியினை விருந்தளிப்பர். **கள்சுடு மகளிர்"** எனக் குறிப்பதால் பெண்கள் கள் உருவாக்கிய பண்பாட்டினை அறியலாம். இது இவ்வினத்தின் சிறப்பாக உள்ளது.

அந்தணர்

அந்தணர் என்பவர்கள் எப்பொழுதும் உயர்வான நிலையில் வைத்து எண்ணப்படுபவர்கள். இவர்களுக்கே முதலில் கல்வி கற்கும் உரிமை இருந்தது.

செழுங்கன்று யாத்த சிறுதாட் பந்தர்

பைஞ்சேறு மெழுகிய படிவ நல்நகர்

மனைஉறை கோழியோடு ஞமலி துன்னாது

வளைவாய்க் கிள்ளை மறைவிளி பயிற்றும் (297-300)

செழுமையான கன்றுகளைப் பிணித்துள்ள சிறிய கால்களைக் கொண்ட பந்தரினையும், சாணத்தால் மெழுகப்பட்ட தரையினையும், வழிபடு தெய்வங்களையும் உடைய அந்தணர் இல்லங்களில் கோழிகளையும், நாய்களையும் காண இயலாது. கிளிகளுக்கு வேதத்தின் ஓசையைக் கற்பிக்கும் தொழிலினை உடையவர்கள் அந்தணர். இவர்களின் உணவு நெற்சோறு, மோரிலிருந்து எடுத்த வெண்ணெயில் வெந்த மிளகுப் பொடியையும், கறிவேப்பிலையையும் கலந்து இட்ட மாதுளங்காய் பொரியல், மாவடுவினால் செய்யப்பட்ட ஊறுகாய் முதலியவையாகும். சைவ உணவுப் பழக்கத்தை முதலில் கடைப்பிடித்தவர்கள்

இவ்வினத்தவரே ஆவார். ஒரு இனக்குழு மக்களின் பொருள்சார் பண்பாடு உயர்வான நிலையினை அடையும்போது பிற இனத்தாரும் அதனைப் பார்த்தொழுகுவார். அதனை இக்குழுவின் இயல்பெனக் கருதாமல் உயர்வென நினைத்த மனித மனத்தால் எழுந்ததே **'மேனிலையாக்கம்'** எனும் கருத்து.

பெரும்பாணாற்றுப்படை உள்ளிட்ட பழந்தமிழ் இலக்கியங்களில் எந்தவொரு உணவும் உயர்வானதாகவோ, இழிவானதாகவோ கூறப்படவில்லை. அந்தந்த நிலம் சார்ந்த வாழ்க்கை முறைகளை அடிப்படையாகக் கொண்டு பண்டமாற்றம் செய்து வாழ்ந்து வந்ததை அறியமுடிகின்றது. **"தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அவர்க்கொரு குணமுண்டு"** என்பதுபோல் அவரவர் நிலத்தில் அவர்களின் இயல்பான இன அடையாளத்துடன் வாழ்ந்து வந்துள்ளதை அறிய முடிகின்றது. அவ்வாறு வாழ்வதே இனவரைவியலுக்கு அடிப்படையானதாகும்.

முடிவுரை

சங்க இலக்கிய நூல்களுள் ஒன்றான பெரும்பாணாற்றுப்படையில் பதிவு பெற்றுள்ள கருத்துக்கள் அக்காலத்திய நடைமுறைகளை ஒட்டியன. அக்காலச் சமூகம் இனக்குழு மரபினைச் சார்ந்தது. எனவே அந்தந்த நிலப்பரப்பில் வாழ்ந்தவர்கள் அந்தந்த நிலத்திற்கேற்ற தொழில்களைச் செய்து வாழ்ந்துள்ளனர். அரசர்களுக்குள் போட்டியும் பொறாமையும் இருந்து பகைக்கு வித்திட்டது எனினும் மக்கள் குறிப்பாக நிலம் சார்ந்த மக்கள் அவரவருக்குரிய தொழில்களைச் செய்து ஏற்றத்தாழ்வின்றி வாழ்ந்துள்ளனர். அத்தகைய மக்களின் புழங்கு பொருட்களும், பண்பாடும் அவ்வினத்தவர்களின் தனிப்பட்ட சிறப்புக்களை எடுத்துக்காட்ட உதவின. இவ்வடிப்படையில் நோக்கும்போது இனவரைவியல் என்னும் கோட்பாடு சார்ந்த பல்வேறு கூறுகள் இந்நூலுள் இடம்பெற்றுள்ளதை மேலே கூறிய கருத்துக்களின் வழி அறிந்துகொள்ள முடியும்.

****

சங்கச் செய்திகள்...

மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத்தின் 120ம் ஆண்டு தொடக்க விழா 21.09.2020 அன்று செந்தமிழ்க் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் செந்தமிழ் இதழின் ஆசிரியர் சதாசிவம், கல்லூரிக் குழுத் தலைவர் தசரதராமன், கல்லூரி மேனாள் பேராசிரியர்கள் முனைவர். க.சின்னப்பா, க.ஜெயமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டு தமிழ்ச் சங்க நிறுவனர் வள்ளல். பொன். பாண்டித்துரைத் தேவரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர். பின்னர் தமிழ்ச் சங்கத்தின் பணிகள் குறித்து உரை நிகழ்த்தப்பட்டது. நிகழ்ச்சியில் செந்தமிழ் கல்லூரி முதல்வர், துணை முதல்வர் பேராசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பாலவநத்த ஜமீந்தா ரெனு மெங்கள்
பாண்டித்துரை யொரு பாவலனே
பண்டுள முச்சங்கப் பாங்கே தமிழ்ச் சங்கம்
பாரில் நிறுவிய காவலனே
மேலும் புலவர்கள் மெச்சும் சொல்வித்தகனே!
மிகுந்தநூ லாராய்ச்சி மிக்குடையான்
மேனாடெ லாம்புகழ் வேண்டுவன பெற்ற
மேதகையான் கற்பகக் கொடையான்

தொகையறா

வேதநூ லகத்தியத்தை விளங்குதொல் காப்பியத்தை
ஆதியாமிலக்கியத்தை அரும்பிறவிலக்கணத்தை

முடுகுசந்தம்

விதவிதம் பதிப்பித்து வெளியிடத்தனமே
விகசிதமுடனளித் துதவினன் மூளுமே

பல்லவியெடுப்பு

விற்பன பாஸ்கர மாதாந்தச் செந்தமிழ்
வித்வக லாசாலை வாழியவே

- நாடக நடிகர், முத்தமிழ்சேத்திர மதுர பாசுகரதாசு பாடியது.

(நூற்றாண்டு விழா மலரிருந்து)

நவம்பர் திங்கள் நினைவுக்குரிய தமிழ்ச்சான்றோர்கள்

பரிதிமாற்கலைஞர்
(நவ.2)

சோமலே
(நவ.4)

கி.வா.ஜகந்நாதன்
(நவ.4)

தமிழ்நாடன்
(நவ.9)

சங்கரதாசு சுவாமிகள்
(நவ.13)

யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர்
(நவ.16)

வ.உ.சி
(நவ.18)

அ.சிதம்பரநாதனார்
(நவ.22)



தனுஷ்கோடி ராமசாமி
(நவ.25)

பதிப்பாசிரியர்: **பேரா. இரா.சதாசிவம்**

ஆசிரியர் குழு

முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்**

முனைவர் **ம.திருமலை**

முனைவர் **இ.மறைமலை**

முனைவர் **செ.கந்தசாமி**

முனைவர் **பெ.சுயம்பு**

முனைவர் **உ.கருப்பத்தேவன்**

முனைவர் **அ.நந்தினி**

முனைவர் **அ.தட்சிணாமூர்த்தி**

முனைவர் **கு.வெ.பாலசுப்பிரமணியன்**

முனைவர் **மு.மணிவேல்**

முனைவர் **இ.கி.ராமசாமி**

முனைவர் **உ.ல.பாலசுப்பிரமணியன்**

முனைவர் **ச.கவிதா**

RNI Regd. No.5507/56

செந்தமிழ்க் கல்லூரி

நான்காம் தமிழ்ச் சங்கம்

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B தேசியத்தரம் பெற்றது)
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 2343707

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

நன்கொடை கிடையாது

சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன

முனைவர் கி.வேணுகா
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,
செயலாளர்
நான்காம் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை,
மதுரை - 625 001.

From
THE SECRETARY
The Fourth Tamilsangam
54, Tamil Sangam Road,
Madurai - 625 001,TAMILNADU, INDIA

பெறுநர்/To,

Book Post

வெளியிடுபவர்: வழக்குரைஞர் **ச.மாரியப்பமுரளி** செயலாளர்
54, தமிழ்ச் சங்கச் சாலை, மதுரை - 1 ✆ 0452 - 2343707
பதிப்பாசிரியர்: **இரா.சதாசிவம்**, 2/861, இராசராசன் தெரு, மதுரை - 20, அலைபேசி:94874 45403
அச்சகம்: **செந்தமிழ் அச்சகம்**, 54, தமிழ்ச்சங்கச் சாலை, மதுரை- 1